ராகம் 92



# கிழக்கு கடற்கரை ராகம்


**ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர்**

அருட்பணி. காணிக்கைராஜ் G

**ஆசிரியர் குழு**

அருட்பணி. ராஜேஷ்
அருட்பணி. ஜார்ஜ்
அருட்பணி. சகாயராஜ்
திரு. ரோனா ஆல்பர்ட்

**வடிவமைப்பு**

இன்பென்ட் ஜீசஸ் பிரிண்டர்ஸ்,
சிவகாசி, Mob : 80568 06001

**அச்சில் உதவி**

L. சுபாஷினி



**திருத்தல முகவரி**

பாலவாக்கம் கடற்கரை
புனித அந்தோணியார் திருத்தலம்
38. எம்.ஜி.ஆர்.சாலை
பாலவாக்கம், சென்னை-41
தொ.பேசி: (044) 2449 3684, 044&2449 3442
மின்னஞ்சல்: seashorestantony@yhoo.co.in
இணையம்: www.seashorestanthony.org


## உள்ளே...


ஆசிரியர் பக்கம் ........ 02

அன்னை மரியா இறைவார்த்தையின்படி
அருட்பணி. ராஜேஷ் ........ 04

ஆழம் ஆழத்தை தேடுகிறது
அருட்பணி. இயேசு ஆண்டனி ........ 07

ஞாயிறுசிந்தனைகள்
அருட்பணி. சகாயராஜ் ........ 12

புனித செசிலியா
அருட்பணி ஜார்ஜ் ........ 22

அதிகாரமா அது என்ன?
அ. மரிய அருள் ராஜா சே.ச. ........ 23

அம்மா அங்கே போ போ...
ரோனா ஆல்பர்ட் ........ 26

அவள் ஒரு தேவதை
முனைவர் ம. டார்த்தி செல்வ மேரி ........ 29

உறவுகள் தொடர்கதை
பணி. ஜான் பிரான்சிஸ் ........ 32

விண்வெளியில் நினைவு அஞ்சலி-யாருக்கு?
........ 34

ஞானப் பெற்றோர்களின் கடமைகளும் தகுதியும்
அருட்பணி. யாக்கோபு ........ 36

ஜோக்ஸ் ........ 38

சாட்சிகள் ........ 39

திருத்தல திருப்பலி நேரங்கள் ........ 40





## அருட்பணி. காணிக்கைராஜ்
திருத்தல அதிபர்



## ஆசிரியர் பக்கம்

**அன்பான வாசக நண்பர்களுக்கு ...**

பாலவாக்கம் புனித கடற்கரை அந்தோணியார் திருத்தலத்தின் சார்பாக செபங்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். கிழக்கு கடற்கரை ராகம் மாத இதழுக்கு நீங்கள் அளிக்கும் ஆதரவுக்கு நன்றி கூறுகின்றேன்.

புகழ்பெற்ற பேச்சாளர் திரு. சுகி.சிவம் அவர்கள் மனிதர்களின் குணங்களைப் பற்றிக் குறிப்பிடும்போது அவர்களை மூன்று விதமாக வகைப்படுத்திக் காட்டுகிறார்.

முதல்வகை மனிதர்கள் விலங்குத் தன்மை உடையவர்கள். விலங்குகள் அடுத்த விலங்குகளைக் கொன்று தங்களது பசியை ஆற்றிக்கொண்டு உயிர் வாழ்வதுபோல, சில மனிதர்கள் அடுத்தவர்களைத் துன்புறுத்தி உயிர் வாழ்கிறார்கள். இவர்கள் விலங்குக்குச் சமமானவர்கள்.

இரண்டாம் வகை மனிதர்கள் மனித இயல்புடையவர்கள். இப்படிப்பட்டவர்கள் தாங்களும் வாழ வேண்டும், மற்றவர்களும் வாழ வேண்டும் என்று நினைப்பவர்கள்.

மூன்றாம் வகை மனிதர்கள் மாமனிதர்கள்....புனிதர்கள்! இவர்கள் மற்றவர்கள் வாழ வேண்டும் என்பதற்காக துன்பங்களை ஏற்று பிறர் வாழ சுயநலமின்றி தங்களையே அர்ப்பணிப்பார்கள்.

இந்த மூன்றாம் வகை மனிதர்களாக இறையுறவில், நெறிபிறழாமல் வாழ்ந்த புனிதர்கள் விழாவையே நவம்பர் மாதம் 1-ஆம் தேதி கொண்டாடுகிறோம். அனைத்து புனிதர்களின் விழா நமக்குத் தருகிற அழைப்பு மனிதர்கள் புனிதர்களாய் மாற வேண்டும் என்பதே.

இம்மாதம் 2ஆம் தேதி மரித்த அனைத்து ஆன்மாக்களின் நினைவு விழாவை திருஅவையோடு இணைந்து கொண்டாடுகிறோம். Die Empty என்கிற புத்தகத்தின் ஆசிரியர் Todd Henry கல்லறையைப் பற்றிக் குறிப்பிடும்போது, 'உலகத்திலேயே விலை மதிக்கத்தக்க இடம் கல்லறை' என்கிறார். அதற்கான காரணமாக "பயன்படுத்தாத அறிவு, திறமை, ஆற்றல், சக்தி, சிந்தனைகள்

கடவுளே, நீர் இதயத்தை ஆய்ந்தறியவர் என்று நான் அறிவேன் (1 குறி 29:17)

அனைத்தும் அங்கேதான் புதைக்கப்பட்டு இருக்கின்றன. அவையெல்லாம் சீராக, சரியாகப் பயன்படுத்தப்பட்டு இருந்தால் வியக்கத்தக்க அதிசயங்கள் உலகத்தில் நடந்திருக்கும்'' என்று கூறுகிறார். சுருங்கச் சொன்னால், தங்களுடைய திறமைகளை, சக்தியை, ஆற்றலை பயன்படுத்தாமலேயே பல மனிதர்கள் இறந்து விடுகிறார்கள் எனபதுதான் புத்தக ஆசிரியர் சொல்லும் செய்தி.

கல்லறைத் திருவிழா என்று மரித்த அனைவரின் திருவிழாவைக் கொண்டாடும் இம்மாதத்தில் நமது வாழ்க்கையை யோசித்துப் பார்க்க வேண்டியுள்ளது. ஒரே ஒரு முறை வாழும் இந்த வாழ்க்கையை அர்த்தமுடையதாக மாற்றிக் கொண்டால்தான் விண்ணக வாழ்வுக்கு உரியவர்களாவோம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

நவம்பர் 14 அன்று குழந்தைகள் தினத்தைச் சிறப்பிக்கின்றோம். ஒருவன் கடவுளைப் பற்றி அறிய வேண்டுமானால் அவன் குழந்தையாக மாற வேண்டும் என்பார்கள். 'குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று, குழந்தையின் இருப்பில் இறைவனைக் காண்போம்' என்பார்கள். ''குழந்தைகளோடு இருப்பதே நம் ஆன்மாவை பலப்படுத்தும் மருந்து'' என்கிறது ரஷ்யப் பழமொழி. ''குழந்தைகளின் கரம் பற்றியே நாம் மோட்சத்தை எட்டிப் பிடிக்க முடியும்'' என்று கூறுகிறது பிரெஞ்சுப் பழமொழி. குழந்தைகள் எப்படி நடத்தப்படுகிறார்களோ அதை வைத்துத்தான் அந்த சமூகத்தின் ஆன்மாவை அறிந்து கொள்ள முடியும் என்று கூறினார் நெல்சன் மண்டேலா.

குழந்தைகள் இறைவன் நமக்குத் தந்த வரம். அவர்களை கடவுளின் விருப்பப்படி வளர்ப்பது நமது கடமை. குழந்தைகளை அன்பு செய்வோம், அவர்கள் நலனின் அக்கறை கொள்வோம். அவர்களின் எதிர்காலம் நலமாய் இருக்க அனைவரும் இணைந்து அவர்களுக்கு வழி காட்டுவோம். இனிய குழந்தைகள் தின நல்வாழ்த்துகள்!





அன்புடன்
அருட்பணி. காணிக்கைராஜ்



# அன்னை மரியா இறைவார்த்தையின்படி

**இதோ ஆண்டவரின் அடிமை.**
**இறைவார்த்தையின்படி ஆகட்டும்...**

அன்னை மரியா இறைவார்த்தையை தன் வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்தவர். இயேசுவை கருவில் சுமந்தது முதல் கல்வாரியில் இயேசுவைக் கையளித்தது வரை இறைவார்த்தையை தன் வாழ்வாக வாழ்ந்தார். இயேசு உயிர்பெற்றெழுந்து விண்ணகம் சென்ற பிறகு யூதர்களுக்கு அஞ்சி நடுங்கிய சீடர்களை இறையாட்சிப் பணியை நோக்கி இறைவார்த்தையின் ஒளியில் திடப்படுத்தினார் . இதன் வழியாகத்தான் திருத்தூதர்கள் பெந்தகோஸ்தே நாளில் தூய ஆவியின் வல்லமையைப் பெற்றுக்கொண்டனர். எனவே அன்னை மரியா இறைவார்த்தையை வாழ்வாக்கிய ஒரு முன்மாதிரியாக இருக்கின்றார்.



ஏனெனில் தன்னையே முழுவதுமாக இறைவனின் வார்த்தைக்கு கையளித்து "இதோ ஆண்டவரின் அடிமை" என மீட்புத் திட்டத்திற்கு முழுவதுமாக கீழ்ப்படிந்தார் அன்னை மரியா.

இந்த வார்த்தைகளில் இருந்து மட்டும் அன்னை மரியாவின் கீழ்ப்படிதலான வாழ்வு தொடங்கவில்லை. தொடக்க நூலில் ஆதாமும் ஏவையும் இறைவனுக்கு கீழ்ப்படியாமல் போனது பாம்பின் சூழ்ச்சி யானதால், ஆண்டவராகிய கடவுள் பாம்பிடம் "உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவர் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். அவர் வித்து உன் தலையைக் காயப்படுத்தும். நீ அதன் குதிங்காலைக் காயப்படுத்துவாய்". (தொ.நூ.3:14,15) என்று சபித்தார். இவ்வசனம் மீட்பின் தொடக்கமாகவும் மரியா இறைவனின் மீட்புத் திட்டத்தில் பங்கெடுப்பதன் தொடக்கமாகவும் அமைகிறது. அன்னை மரியாவின் பங்கு இறைவனால் முன்குறிக்கப்பட்டுள்ளது மிகவும் தெளிவாகிறது.

"ஆண்டவர் தாமே உங்களுக்கு ஓர் அடையாளத்தை அருள்வார்; இதோ கருவுற்றிருக்கும் அந்த இளம்பெண் ஓர் ஆண்மகனைப் பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு இம்மானுவேல் என்று பெயரிடுவீர்" (எசாயா 7:14) என்று தாவீதின் குடும்பத்தாருக்கு எசாயா இறைவாக்கினர் வழியாக தமது மீட்பின் வாக்குறுதியை உறுதிப்படுத்தும் நிகழ்ச்சியில் மரியா இறைவனின் மீட்புத் திட்டத்தை நிறைவேற்ற தம்மையே முழுமையாக அர்ப்பணித்ததை தூய லூக்கா நற்செய்தியிலும் தெளிவாகக் காண முடிகிறது.

தம்மைப் பெற்ற தாய் மரியா தம்மை கருவில் சுமந்தது முதல் தம்முடைய இறையாட்சிப் பணிகளிலும் தொடர்ந்து இறைவார்த்தையைக் கேட்டு அதன்படி நடப்பவராக இருக்கிறார் என்பதை இயேசு அறிந்துள்ளார். இருந்தபோதிலும் "யார் என் தாய்? யார் என் சகோதரர்?" என்ற இயேசுவின் கேள்வியை எவ்வாறு புரிந்து கொள்வது. தம்முடைய தாய்க்கு இயேசு

முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்று புரிந்து கொள்வதை விட 'நடமாடும் இறைவார்த்தையே என் தாய்தான்' என்று கூறுவது போல அமைந்துள்ளது. தம் தாயை பிறருக்கு முன்மாதிரியாக இயேசு இந்த நிகழ்வின் வழியாகச் சுட்டிக் காட்ட விரும்பினார். ஏனெனில் தாய் என்ற இரத்த உறவைத் தாண்டி இறையரசு மற்றும் இறைவார்த்தை தொடர்பான உறவிற்கு இயேசு முக்கியத்துவம் கொடுத்ததால்தான் இவ்வாறு கூறினார்.

இயேசு தம் தாயை தமது இரத்தஉறவு என்ற குறுகிய வட்டத்துக்குள் முடக்கி விடவில்லை. சீடர்கள் பார்வையில் அன்னை மரியா வெறும் இயேசுவின் தாயாக மட்டுமே தென்பட்டார். ஆனால் இயேசுவின் பார்வையில் அன்னை மரியா இறைவார்த்தையைக் கேட்டு அதன்படி நடப்பதில் முன்மாதிரியாக இருக்கின்றார் என்பதை வலியுறுத்தவே இவ்வாறுகூறினார். இதன் வழியாக அன்னை மரியா உண்மையான சீடத்துவ வாழ்வுக்கு மிகச் சிறந்த உதாரணம் என்பதை இயேசு வலியுறுத்தியுள்ளார். இயேசு இரத்த உறவைத் தாண்டி இறைவார்த்தை என்னும் இறையாட்சி உறவிற்கு முக்கியத்துவம் கொடுத்தார். அன்னை மரியாவும் இரத்த உறவைத் தாண்டி இறைவார்த்தை என்னும் இறையாட்சி உறவிற்கு முக்கியத்துவம் கொடுத்தார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இப்படிப்பட்ட வாழ்வு வாழ்வதுதான் இறையாட்சி வாழ்வுக்கு சான்று பகர்ந்த



இயேசு ஆண்டவர் உருக்கொள்வதற்கு முன்பே கபிரியேல் தூதர் மரியாவிடம் "அருள்மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்." என்று கூறியது அத்தனை பெண்களை விட ஆண்டவருடைய கண்களுக்கு மரியா மேன்மைபெற்றவராக தெரிந்திருக்கிறார். அவற்றையெல்லாம் விட என்னவெல்லாம் நேரப் போகிறது என்று தெரிந்தும் ஆண்டவரின் கட்டளைக்கு பணிந்து மீட்புத் திட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்ட மரியாவின் திடம் எத்தகையது என்பது வியப்பில் ஆழ்த்துகிறது.

இயேசு ஆண்டவர் உருக்கொள்வதற்கு முன்பே கபிரியேல் தூதர் மரியாவிடம் "அருள்மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்." என்று கூறியது அத்தனை பெண்களை விட ஆண்டவருடைய கண்களுக்கு மரியா மேன்மைபெற்றவராக தெரிந்திருக்கிறார். அவற்றையெல்லாம் விட என்னவெல்லாம் நேரப் போகிறது என்று தெரிந்தும் ஆண்டவரின் கட்டளைக்கு பணிந்து மீட்புத் திட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்ட மரியாவின் திடம் எத்தகையது என்பது வியப்பில் ஆழ்த்துகிறது.

இயேசு தமது பணிவாழ்வின் விளக்கத்தையும், மீட்பின் வழியையும் விளக்கியபோது அன்னை மரியா அழுது புலம்பவில்லை. இயேசுவை சரியான பாதையில் வளர்த்தெடுத்திருக்கிறோம் என உவகை கொண்டார். இயேசுவின் மீட்புப் பயணத்துக்கு தடைக்கல்லாக இல்லாமல், படிக்கல்லாகத் தொடர்ந்தார். சிலுவையின் பாதையில் இயேசு பயணித்தபோது "உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவும்" எனும் வார்த்தையின் வீரியத்தை அன்னை கண்டு கொண்டார். வலிகளிலே கொடுமையான வலி தனது அன்பு மகனின் கொடுமையான

நீங்கள் நன்மையைச் செய்ய முன்வருவதே கடவுளின் திருவுளம் (1 பேது 2:15)

சாவை உடனிருந்து பார்க்கும் வலிதான். அந்த வலியைத் தாங்கிக் கொண்டு சிலுவையின் அடியிலேயே கடைசி நிமிடம் வரை நின்ற அன்னை மரியா இயேசுவின் மனதுக்கு உறுதி அளிக்கிறார்.

மழலையாய் விளையாடுகையில் மட்டுமல்ல, மரணத்தோடு நிலை குலைகையிலும் உடனிருப்பவரே உண்மையான அன்புக்கு உரியவர்கள். அன்னை மரியா இயேசுவின் மீட்புப் பயணத்தை அறிந்தவர். இயேசுவின் சிலுவை மரணம் என்பது மீட்புக்கான கதவைத் திறக்கும் முயற்சி என்பதை அன்னை அறிந்திருந்தார். அதனால்தான் அன்னையின் அழுகையையும் தாண்டி ஆன்மீக தாகம் வெளிப்பட்டது. அவரது வலிகளையும் மீறி இறைவனின் வழிகள் அங்கே உருவாயின.

சிலுவையின் பிடியில் இருந்த இயேசு, அன்னையின் மடியில் கிடத்தப்பட்டார். கலங்கிய கண்கள் இயேசுவை கல்லறைக்குள் அனுப்பி வைத்தன. இருளின் குகை மூன்று நாட்களில் முடங்கிப் போக, வெளிச்சத்தின் விதை வெளிக்கிளம்பியது. அன்னை மகிழ்ந்தார். அத்துடன் தன் பயணம் முடிந்து விட்டது என விலகிச் செல்லவில்லை. இயேசு விண்ணேற்படைந்த பின்னரும் இயேசுவின் சீடர்களோடு சேர்ந்து ஒருமனதோடு இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தார். அன்னை மரியா. “அனைவரும் சில பெண்களோடும், இயேசுவின் சகோதரர்களோடும், அவருடைய தாய் மரியாவோடும் இணைந்து ஒரே மனத்தோடு இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தார்கள்” என திருத்தூதர் பணிகள் (1:14) அதை விளக்குகிறது. இப்படி இறைவனுடைய திட்டத்தில் துவக்கம் முதல் முடிவு வரை அன்னை மரியா தன்னை அர்ப்பணித்தார்.



தன்னை முழுமையாக இறைவனின் மீட்புக்காய் கையளித்தார். அதனால்தான் இஸ்லாமிய சகோதரர்களின் புனித நூலான குரான் கூட மரியம் என அன்னை மரியாவின் பெயரை பதிவு செய்து வைக்கிறது. குரானில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரே ஒரு பெண் மரியம் என்பது அன்னை மரியாவுக்குக் கிடைத்த கூடுதல் பெருமை என்பதன்றி வேறில்லை.

இறைத்திட்டத்தில் தன்னை முழுமையாய் கையளித்த அன்னை, நாமெல்லாம் இறைவனின் மீட்பில் பங்குபெற வேண்டும் என விரும்புகிறார். இன்று அன்னை நம்மை நோக்கி, “அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்” என்கிறார். இயேசுவிடம் நம் பாவங்களை அறிக்கையிட்டு மன்னிப்பு வேண்டி அவரது போதனைகளின்படி வாழ்வதே நம்மை மீட்புக்கு உரியவர்களாக்கும். அதுவே அன்னைக்கு நாம் அளிக்கும் மரியாதையுமாகும்.

எனவே நமது அன்றாட வாழ்விலே அன்னை மரியா இறைவார்த்தையின் மீது கொண்டிருந்த தாகத்தை நாமும் கொண்டிருக்கும்பொழுது கிறிஸ்துவின் உறவினர்களாக மாறமுடியும். நாம் இறைவார்த்தையை வாழ்வாக்கக் கூடியவர்களாக வாழ்ந்து இயேசுவின் கருவிகளாக உருமாற அன்னை மரியாவைப் போல இறைவார்த்தையைக் கேட்டு அதனை வாழ்வாக்குவோம்.

அருட்பணி. ராஜேஷ்
திருத்தல உதவித்தந்தை



ஆண்டவர் மேல் உன் கவலையைப் போட்டுவிடு; அவர் உனக்கு ஆதரவளிப்பார் (தி.பா 55:22)

# ஆழம் ஆழத்தை தேடுகிறது

## இயேசுவின் இதய 'பாறை இடுக்குகளில்' குடிபுகுவோம்.

**(புனித அந்தோணியாரின் மறையுரை1)**



**முன்னுரை :**

புனித அந்தோணியாரின் மறையுரைகளில் பொதிந்துள்ள ஆன்மீக வெளிப்பாடுகளை, அவர் ஆற்றிய மறையுரைகளின் சாரத்தை, அதில் பொதிந்துள்ள அவரின் ஆன்மிகச் சிதறல்களை ஒருசில சிந்தனைக் கோர்வையோடு இன்றைய தலை முறைக்கு தருவிக்கும் ஒரு எளிய முயற்சி இது. இந்த பகுதியில் வரும் கருத்துக்கள், விளக்கங்கள் புனித அந்தோணியாரின் ஆன்மீகமாகும். இந்த இதழில் புனித அந்தோணியாரின் லிமோஜெஸ் என்ற இடத்தில் உள்ள புனித மார்ட்டின் மடத்தில் ஆற்றிய மறையுரையை நாம் இந்த இதழில் சேர்ந்து சிந்திப்போம். இந்த மறையுரையின் கருப்பொருளாக அவர் எடுத்துக் கொண்டது: "புறாவுக்குள்ளது போன்ற சிறகுகள் யார் எனக்கு அளிப்பார்? நான் பறந்து சென்று இளைப்பாறுவேன். "(எசா 55:6) என்ற எசாயாவின் வார்த்தைகள். 'எங்கே நிம்மதி' என்று அலைகிற ஆன்மாவுக்கு இளைப்பாறும் இடம் எது என்று சுட்டிக் காட்டுகிறார். மனித மனம் ஏதோ ஒன்றை தேடிக்கொண்டே இருக்கிறது. அடிமனதில் ஆழப் பகுதியில் வெளிப்படும் 'ஏக்கப் பெரு மூச்சு' ஏதோ ஒன்றிற்காய் தவித்துக் கொண்டே இருக்கிறது. அந்த ஏக்கம் கடவுளுக்குள் கலந்து, கரைந்து காணாமல்போகத் துடிக்கும் ஒன்றாகும் வாழ்வின் பாடுகள், கவலைகள், போராட்டங்கள், சோதனைகள் அனைத்திற்கும் நடுவில் மனித மனம் இளைப்பாற இடம் தேடுகிறது. ஓயாத அலைகளாய் தொடர் தேடலில் மனித மனம் அலை பாய்ந்து கொண்டே இருக்கிறது. இந்த மனிதத் தேடலுக்கு வெளிச்சம் காட்டுகிறார் புனித அந்தோனியார்.

**ஆன்மாவின் ஏக்கம; கலக்கமடைந்த உலகம்:**



அடிப்படையில் மனித வாழ்வில் தேடல் என்பது ஒரு தவிர்க்க முடியாத பகுதியாகும். புனித அகுஸ்தினாரின் பின்வரும் வார்த்தைகள் மனிதத் தவிப்பை படம் பிடித்துக் காட்டுகிறது. 'ஓ கடவுளே! உன்னை கண்டடையும் வரை என் ஆன்மா தகித்து / தவித்துக் கொண்டுள்ளது'. இனிமை மிகு பாடல் கூட இந்த தேடலை பின்வருமாறு குறிப்பிடுகிறது." என் உயிருக்குயிரான அன்பரைத் தேடினேன்; தேடியும் அவரை நான் கண்டேன் அல்லேன்" (3:12). பெரும்பாலும், இருக்கும் இடத்தை விட்டு இல்லாத இடம் தேடி அலைந்து ஏமாற்றத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அந்தோணியார் பின் வரும் அழைப்பைத் தருகிறார். "நகரங்களை விட்டு வெளியேறுங்கள். அதாவது, கடவுளை அவமதிப்பு செய்யும் பாவங்கள் மற்றும் தீமைகள், ஆன்மா தன்னை கடவுளிடம் உயர்த்துவதைத் தடுக்கும் மனஉளைச்சல்கள், மற்றும், அடிக்கடி, அவரைப் பற்றி நினைப்பதிலிருந்து கூட நம்மைத் தடுக்கும் நகரங்களை விட்டு வெளியேறுங்கள்', "இரவும் பகலும் அவர்கள்

அதன் மதில் மேல் ஏறி அதைச் சுற்றி வருகின்றனர்; கேடும் கொடுமையும் அதில் நிறைந்திருக்கின்றன. அதன் நடுவே இருப்பது அழிவு; அதன் தெருக்களில் பிரியாதிருப்பன கொடுமையும் வஞ்சகமுமே" (திபா 55:10 11). இந்த நகரத்தில் கடவுளுக்கும் மனிதருக்கும் எதிராக துன்பம் இழைக்கப்படுகிறது. உண்மையை போதிக்கும் போதகருக்கு எதிராக, மட்டு மீறிய உலகத் தேவைகளை நிறைவேற்றத் துடிக்கும் உழைப்பிலிருந்து, அநீதியான செயல்களில் இருந்து, வியாபார பரிவர்த்தனைகள் மட்டு மீறிய இலாப நோக்கு... இப்படிப்பட்ட நகரத்தில் இருந்து வெளியேறுங்கள் என்கிறார்.

மோவாபிலே குடியிருக்கிறவர்களே, அது மோவாபு நகரத்தைப்போலப் வீண் பெருமையுடன் இந்த உலகத்தில் வீற்றிருக்கிறது. இந்த உலகில் எல்லாம் பெருமைக்காகவே செய்யப்படுகிறது. கடவுளிடம் சரணடைய மறுக்கும் மனிதரது அறிவு, ஐம்புலன்கள், கடவுளின் விருப்பத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கும் மனித மனம், பகுத்தறிவை புறம்தள்ளும் புலன்களின் மேட்டிமைத் தன்மை ... இப்படிப்பட்ட நகரத்தில் இருந்து வெளியேருங்கள். இந்த உலகத்தின் பற்றுக்களில் இருந்து வெளியேறுங்கள் என்று அழைக்கிறார். இந்த நகரத்து தீமைகளால் கறைபடாமல் மட்டும் இருப்பது மனித ஆன்மாவிற்கு போதாது.

**கன்மலை நோக்கி ஒரு தாவல் :**



பிறகு என்னதான் செய்ய வேண்டும்? அந்தோணியார் சொல்கிறார்: புறாவுக்கு உள்ளது போன்ற சிறகுகள் எனக்கு யார் அளிப்பார்? நான் பறந்து சென்று இளைப்பாறுவேனே! (திபா 55:6), மேலும், "மோவாபின் குடிமக்களே, நகர்களை விட்டு வெளியேறுங்கள்; பாறைப் பகுதிகளில் குடியேறுங்கள்; பாறையின் இடுக்குகளில் கூடுகட்டி வாழும் புறாவைப் போல் இருங்கள்" என்ற திருப்பாடல் ஆசிரியரின் ஏக்கத்தை பதிலாய் தருகிறார். பரபரப்பு, அடிமைத்தனங்கள், அத்துமீறும் உணர்வு முடிச்சுகள், சோதனை மேல் சோதனை என்ற விரக்தி, ஒடி ஒடி... உழைத்து உழைத்து...களைத்துப்போன மனித ஆன்மா என்கிற இந்த புறா பாறை இடுக்குகளில் தஞ்சம் புக, இளைப்பாறுதலை பெற்றுக்கொள்ளத் துடிக்கிறது. உயர்ந்த மலையில் தனிமையில் பாறை இடுக்குகளில் குடியிருக்கத் துடிக்கும் பறவையாய் தவிக்கிறது என்கிறார். பரபரப்பான, அடிமைப் படுத்தும் நகர நெரிசல்களில் இருந்து பாறை இடுக்குகளுக்கு பறந்து செல்லத் துடிக்கும் மனித ஆன்மாவின் விருப்பத்தை நமக்கு அடையாளம் காட்டுகிறார். நகர அடிமைத் தனங்களில் இருந்து ஒரு தவளை குதிப்பாக பாறை இடுக்குகளுக்கு இடம் பெயர அழைக்கிறார்.

**ஆழம் ஆழத்தை தேடுகிறது:**

எனவே இறைவாக்கு சொல்கிறது, பாறையில் உங்கள் கூட்டை கட்டுங்கள். அந்த பாறையில் குடித்தனம் நடத்துங்கள். அந்த பாறை இயேசு கிறிஸ்துவே. இயேசு கிறிஸ்து என்கிற பாறையின் மீது வீடு கட்டுகிறவன் அறிவாளி என்கிறார் இயேசு கிறிஸ்து (மத்7:24,27) அவரில் உங்களை நிலைநிறுத்துங்கள்; அவர் உங்கள் எண்ணங்களின் நிலையான கருப்பொருளாக, உங்கள் அன்பின்

மையமாக இருக்கட்டும். யாக்கோபு பாலைவனத்தில் ஒரு கல்லின் மீது ஓய்வெடுத்தார், அவர் தூங்கும்போது நிலத்தில் ஊன்றியிருந்த ஏணியின் மீது வான தூதர்கள் ஏறுவதையும் இறங்குவதையும் கண்டார். கடவுளிடம் இருந்து ஆசீரைப் பெற்றார். (தொ.நூ. 28:16). இயேசு கிறிஸ்து மீது முழு நம்பிக்கை வைப்பவர்களுக்கும் இப்படிப்பட்ட இறைஅனுபவங்களை பாறை இடுக்குகளில் குடிபெயரும் போது பெற்றுக்கொள்வார்கள் என்கிறார் அந்தோணியார். ஒரே நிபந்தனை; இயேசு கிறிஸ்துவுக்குள் குடிபெயர வேண்டும். அவர்கள் விண்ணக வெளிப்பாடுகளால் நிரப்பப்படுவார்கள் அவர்கள் வான தூதர்களுடன் சேர்ந்து வாழ்வார்கள், யாக்கோபை போல அவர்கள் வடக்கிலும், தெற்கிலும், கிழக்கிலும், மேற்கிலும் இருந்து ஆசீர்வதிக்கப் படுவார்கள் (தொ.நூ.28:14). வடக்கே, கடவுளின் தெய்வீக சுவாசம், உடலின் இச்சைகளை பலவீனம், அடையச் செய்கிறது. கிழக்கு, என்பது நம்பிக்கையின் ஒளி மற்றும் நற்செயல்களின் பலன்; தெற்கே, ஞானம் மற்றும் அன்பின் முழு சிறப்பையும்; மேற்கு நோக்கி, இது பழைய மனிதனின் தீமைகளுடன் அடக்கம் செய்யப்படுகிறது. ஆனால், இந்தப் பாறையில் தங்காத ஆன்மாவைப் பொறுத்தவரை, அது இறைவனால் ஆசீரவதிக்கப்படும் என்று எதிரபார்க்க முடியாது. இயேசு என்கிற பாறைக்குள் கூடு கட்டாத ஆன்மா ஒருபோதும் இறைவனின் அருளாசீரைப் பெற்றுக்கொள்ள முடியாது.



**இயேசு என்ற பாறைக்குள் விழுதிறக்குங்கள்:**

அந்தோணியாரின் அடுத்த கட்டமாக இறை மனித உறவின் அடுத்த கட்டத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார். அதாவது, இந்த நகரத்தை விட்டு விலகுவது, நகரத்தின் கறைகளால், சோதனைகளால் தொடமுடியாத துரத்தில் இருப்பது, அதனுடைய தீமைகளினால் பாதிக்கப்படாமல் இருப்பது என்பது ஆன்மீகத்தின் உச்சமாக இருக்க முடியாது, அல்லது அது போதுமானதல்ல. மாறாக, பாறை இடுக்கின் உள்ளே உயர்ந்த இடத்தின் பாறையின் வாயில் கூடு கட்டும் புறாவைப் போல், ஆழத்திற்கு செல்ல வேண்டும். அந்தோணியார் அந்த பாறை இயேசு என்றும், அந்த பாறையின ஆழம் அல்லது பாறை இடுக்கு என்பது இயேசுவின் விலாவில், அவரது இதயத்திற்கு பக்கத்தில் குத்தப்பட்ட காயம் என்கிறார். அந்த காயத்தில் நாம் நமது இருப்பிடத்தை புறாவைப் போல் கட்டி அமைத்து கொள்ள வேண்டும். இதுவே நாம் தஞ்சம் புக வேண்டிய பாதுகாப்பான துறைமுகமாகும். அந்த இடத்திற்கு தான் தெய்வீக மணவாளன் இயேசு கிறிஸ்து நம்மை அழைக்கிறார்.

**இயேசுவின் விலாவில் குத்தப்பட்ட காயமே பாறை வெடிப்பு:**

இனிமை மிகு பாடல் இந்த தெய்வீக காதலை இறை மனித ஏக்கத்தை பின்வருமாறு பதிவு செய்கிறது. "என் அன்பே, என் அழகே, எழுந்து வா, விரைந்து வா, பாறை பிளவுகளில் இருப்பவளே, குன்றின் வெடிப்புகளில் இருக்கும் என் வெண்புறாவே! காட்டிடு எனக்கு உன் முகத்தை; எழுப்பிடு நான் கேட்க உன் குரலை." (இ.பா2:13–14). இந்த தெய்வீக மணவாளன் பாறையின் எண்ணற்ற பிளவுகளைப் பற்றி, இடுக்குகளைப் பற்றி

பேசுகிறார். ஆனால் அவர் ஆழமான குழியைப் பற்றி குறிப்பாக பேசுகிறார். இயேசுவின் விலாவில் குத்தப்பட்ட காயமே அந்த குழி. உண்மையில், அவரது உடலில் எண்ணற்ற காயங்கள் இருந்தன, மற்றும் அவரது பக்கத்தில் ஒரு ஆழமான காயம் இருந்தது; இது அவரது இதயத்திற்கு இட்டுச் செல்கிறது. இந்த பாறை இடுக்கிற்குள்தான் கடவுள் நம்மை ஏகாந்தத்திற்கு அழைக்கிறார். இந்த மறைவிடத்திற்குதான் மனித ஆன்மா என்கிற புறா ஏங்குகிறது. தன்னுடைய எதிரிகள் அனைத்திலிருந்தும் பாதுகாக்கும் அடைக்கலப் பாறை இந்த தெய்வீக இதயம். பாறையின் பிளவுகளுக்குள் ஓய்வெடுப்பதன் மூலம், இரையைப் பிடிக்கும் பறவைகளின் நாட்டத்திலிருந்து புறா பாதுகாப்பாக உள்ளது, அதே நேரத்தில், அவள் ஒரு அமைதியான புகலிடத்தைத் தயார் செய்து கொள்கிறாள், அங்கு அவள் அமைதியாக ஓய்வெடுக்கவும், பாதுகாப்பாகவும் இருக்க முடியும். எனவே மனித ஆன்மா இயேசுவின் இதயத்தில் சாத்தானின் சூழ்ச்சிகள் மற்றும் தாக்குதல்களுக்கு எதிராக பாதுகாப்பான புகலிடத்தையும், மகிழ்ச்சியான புகலிடத்தையும் காண்கிறது.



ஆனால் பாறையின் துளையின் நுழைவாயிலில் நாம் ஓய்வெடுக்கக்கூடாது, அதன் ஆழத்தை ஊடுருவ வேண்டும். ஆழமான பள்ளத்தின் வாயில், அவருடைய பக்கத்திலுள்ள காயத்தின் வாயில், உண்மையில், நம்மை மீட்டுக்கொண்ட விலைமதிப்பற்ற இரத்தத்தைக் கண்டுபிடிக்க வேண்டும். இந்த இரத்தம் நமக்காக மன்றாடுகிறது. மற்றும் நமக்காக இரக்கத்தைக் கோருகிறது. எனவே, ஆன்மா நுழைவாயிலில் இருக்கக்கூடாது. அவள் தெய்வீக இரத்தத்தின் குரலைக் கேட்டதும், புரிந்து கொண்டதும், இயேசுவின் இதயத்தின் மிக உள்ளான சரணாலயத்திற்கு அவள் விரைந்திருக்க வேண்டும். அங்கு அவள் ஒளி, அமைதி மற்றும் விவரிக்க முடியாத ஆறுதல்களைக் காண்பாள்.

### இயேசு என்ற பாறையின் மீது உங்களின் வீடு கட்டப்படவேண்டும்:

எதைக் கொண்டு வீடு கட்டுவது? பாறையின் ஆழமான பள்ளத்தில் கூடு கட்டும் புறாவைப் போல் நீங்களும் இருங்கள் என்கிறார். அங்கும் இங்கும் சேகரிக்கும் சிறிய வைக்கோல் துண்டுகளால் புறா தன் கூட்டைக் கட்டுகிறது. இயேசுவின் இருதயத்தில் நாம் எப்படி ஒரு உறைவிடத்தை உருவாக்குவது? இந்த தெய்வீக இரட்சகர், நாம் வாழ்வதற்கான இடத்தை மிகவும் கருணையுடன் நமக்குத் தருகிறார், அதே நேரத்தில் அதைக் கட்டுவதற்கான பொருட்களையும் நமக்குத் தருகிறார். அந்தோணியார் பின்வருமாறு எழுதுகிறார். "ஓ மனித ஆன்மா, கிறிஸ்துவின் பிரியமான புறா, உலகம் அதன் காலடியில் மிதிக்கும் அந்த சிறிய வைக்கோல் துண்டுகளைக் கொண்டு கூட்டைக் கட்டுகிறது போல, கடவுளே அவரது இதயத்தை தந்து, அந்த இதயத்தில் கூடு கட்டுவதற்கு தேவையான பொருட்களையும் தருகிறார். நகரத்தில் வாழும் மனிதர்கள் இந்த கடவுள் தரும் பொருட்களை தங்கள் காலில் போட்டு மிதிக்கிறார்கள். ஆனால், அவை உனது

மீட்பரும் உனது மணவாளனும் கடைப்பிடிக்கும் நற்பண்புகளாகும், அவைகள்: பணிவு, சாந்தம், ஏழ்மை, தவம், பொறுமை மற்றும் இரக்கம் போன்ற நற்பண்புகளாகும். அவைகளைப் பயனற்ற வைக்கோல் துண்டுகள் என்று உலகம் இகழ்கிறது; ஆயினும்கூட, இயேசுவின் இதயத்தில், பாறையின் ஆழமான குழியில், உங்கள் இல்லிடத்தை நிர்மாணிப்பதற்கான பொருளாக அவை உங்களுக்கு இருக்கும். அந்த ஆழமான குழி இயேசுவின் இதயமாகும்.

**கடவுள் தான் மந்த மனம் தேடும் நிலையான சொந்தம்:**

அந்தோணியாரின் ஆன்மிகம் என்பது உள்ளார்ந்த ஆன்மிகமாகும். இயேசுவின் இதயத்துள் செய்யும் வழிபாடாகும். "யாரிடம் செல்வோம் இறைவா"(யோவா6:68) என்று பேதுரு குறிப்பிடுவது போல மனித ஆன்மா இயேசுவின் பரிசுத்தமான, அன்புத் தீயால் பற்றி எரியும் அவரது இதயத்துள் வாழும் வாழ்வாகும். பாறை இடுக்குகளுக்கு ஆசைப்படும் புறாவைப் போல மனித மனம் அலைந்து திரிந்து இறுதியில் இளைப்பாறும் இடம் அவரது இதயமே என்று உணர்ந்து கொள்ள அழைக்கிறார். அந்த இதயத்திற்காக நாம் ஏங்க வேண்டும் என்று சொல்கிறார்.

நார்விச்சின் ஜூலியான் என்ற துறவியின் வார்த்தைகள் அந்தோணியாரின் இறை மனித ஏக்கத்தைப் பின்வருமாறு பிரதிபலிக்கிறது. “கடவுளே, உமது நற்குணத்தால், உன்னையே எனக்குக் கொடு; எனக்கு நீயே போதும் மேலும் நான் எதையும் குறைவாகக் கேட்க முடியாது அதுவே உங்களுக்கு முழுதான எதையும் குறைவாகக் கேட்டால், எப்போதும் குறைவாகக் கேட்டால், எப்போதும் நான் தேவையில் உழல்பவனாகவே இருப்பேன், ஏனென்றால் உன்னில் மட்டுமே நான் அனைத்தையும் பெற்றுக்கொள்வேன்.” இயேசுவின் இதய வெடிப்புகளில் மனித ஆன்மா குடித்தனம் நடத்தட்டும். இதுவே அந்தோணியாரின் ஆன்மீக மாகட்டும்... நமக்கு அன்றாட வாழ்வாகட்டும்.


அருட்பணி. **இயேசு ஆண்டனி**
செங்கை மேய்ப்பு பணியகம் இயக்குனர்





வாசகர்களுக்கு அன்பான வேண்டுகோள்:

**கடற்கரை ராகம்** மாத இதழுக்கு நீங்கள் அளித்து வருகிற ஆதரவிற்கு மனமார்ந்த நன்றிகள்.
நமது திருத்தல மாத இதழை உங்கள் நண்பர்களுக்கு, உறவினர்களுக்கு அறிமுகப்படுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.
ஆண்டு சந்தா – ரூ. 250/-
தொடர்புக்கு: **73583 65562**



**பக்தி பொருட்கள் மையம்**

நமது திருத்தலத்தில் பக்திப் பொருட்கள் மையம் புதுப்பிக்கப்பட்டு அனைத்து வகையான திருச்சுரூபங்கள் திருப்படங்கள், ஜெபமாலைகள் விற்பனைக்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. திருத்தலத்திற்கு வருகிறபோது பக்தி பொருட்கள் மையத்தை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.



# ஞாயிறு சிந்தனைகள்



அருட்பணி. சகாயராஜ்
செய்யூர் உதவிபங்குத்தந்தை





**பொதுக்காலம் 31ம் ஞாயிறு**
**05.11.2023**
**(1 மலாக்கி 1 :14-2:1-2,8-10)**
**(1தெச 2:7-9,13) மத்தேயு 23:1-12)**

**முன்னுரை**

அன்பு சகோதர சகோதரிகளே, இன்றைய வாசகங்கள் ஆண்டவரின் எச்சரிக்கைக் குரலாகவும் கண்டனத்தின் வெளிப்பாடாகவும் மற்றும் அவரின் கோபத்தையும் பிரதிபலிக்கின்றனவாக இருக்கின்றன. அவர் யார் மீது கோபம் கொள்கிறார்? யாரை எச்சரிக்கிறார்? மற்றும் யாரை கண்டிக்கின்றார்? என்பதையும் எதற்காக இவைகளைச் செய்கின்றார் என்பதையும் இந்த வாரம் சிந்திப்போம்.

**1. குருக்கள் மீது ஆண்டவரின் கண்டனமும் மற்றும் எச்சரிக்கையும்.**

கடவுளின் தூயகத்தில் பணி செய்வதற்காக ஆரோனையும் அவரின் வழி மரபினர்களையும் ஆண்டவராகிய கடவுள் தேர்ந்து கொண்டு குருக்களாக அருட்பொழிவு செய்கிறார் (எண் 3:111) இவர்கள் தங்கள் கடமைகளை மீறும் போது, கி.மு ஐந்தாம் நூற்றாண்டில் எருசலேம் ஆலயம் மீண்டும் கட்டி எழுப்பப்பட்ட பின்பு இறைவாக்கி மலாக்கி மூலமாக கடவுளின் கண்டனமும் அவரின் எச்சரிக்கை குரலும் குருக்களுக்கு எதிராக பதிவு செய்யப்படுகின்றது.

**கடவுள் ஏன் குருக்களை கண்டிக்கின்றார்.**

ஆண்டவரின் தூதுவர்களாக இருந்து (மலாக்கி2:7) அவரின் திருச்சட்டத்தை முறையாக அறிவிக்க வேண்டிய குருக்கள் நெறி தவறி ஒரவஞ்சனையாய் போதித்ததாலும் (மலாக்கி 2:9), மெய்யறிவை காக்காமல் போனதாலும் (மலாக்கி 2:7), ஆண்டவருக்கு அஞ்சாமல் அவரின் பெயருக்கு நடுநடுங்காமல், தீமை அவர்களின் உதடுகளில் இருந்ததாலும் (மலாக்கி 2:6) மந்தையில் ஊனமற்ற கிடாய் இருக்க ஊனமுற்ற ஒன்றை காணிக்கையாக அவர்கள் பலிப்பீடத்திற்கு கொண்டு வந்து அதை பலியாக செலுத்தி அவரை அவமதித்ததனாலும். (மலாக்கி 1:7) ஆண்டவர் கடவுள் குருக்களுக்கு எதிராக தனது கண்டனத்தைப் பதிவு செய்கின்றார்.

**குருக்களுக்கு எதிரான கடவுளின் எச்சரிக்கை.**

“என் பெயருக்கு மாட்சி அளிக்க வேண்டும் என்பதை உங்கள் இதயத்தில்

நான் பசுமையான தேவதாரு மரம் போன்றவன். உன் கனி எல்லாம் உன்னிடமிருந்தே வரும் (ஓசே 14:18)

பதித்துக் கொள்ளாமல் எனக்கு செவி கொடுக்காமல் இருந்தால் உங்களுக்குரிய நல்லாசீர்களை சாபமாக மாற்றுவேன். (மலாக்கி 2:1) உங்கள் பொருட்டு நான் உங்கள் வழி மரபினரை தண்டிப்பேன். (மலாக்கி 1:3) திருநாள் பலி விலங்குகளின் சாணத்தை உங்கள் முகத்திலேயே வீசியடிப்பேன் அதனோடு உங்களை தூக்கி எறிவேன். (மலாக்கி 2:3) உங்களை மக்கள் அனைவருக்கும் முன்னிலையில் இழிவுக்கும் தாழ்வுக்கும் ஆளாக்குவேன். (மலாக்கி 2:9) என்று இறைவாக்கினர் மலாக்கி மூலமாக தங்களுடைய அழைப்புக்கு ஏற்றார்போல் வாழாமல் போன குருக்களுக்கு எதிராக ஆண்டவருடைய எச்சரிக்கையின் குரல் கொடுக்கப்படுகிறது.

**2. மறைநூல் அறிஞர்களையும் பரிசேயர்களையும் இயேசு கண்டிக்கின்றார்.**

இன்றைய நற்செய்தியில் மோசேயின் அதிகாரத்தைப் பெற்றிருந்த மறைநூல் அறிஞர்களையும் பரிசேயர்களையும் ஆண்டவர் இயேசு மிக அதிகமாகக் கடிந்து கொள்கிறார். "வெளிவேடக்காரர்களே ஐயோ உங்களுக்கு கேடு" (மத்23 :11)என்றும்" குருட்டு வழிகாட்டிகளே "(மத்24:24) என்றும் கோபக்கனல்களை வீசுவதைப் பார்க்க முடிகிறது .ஆண்டவர் இயேசு அவர்கள் மீது ஏன் கோபம் கொண்டார் என்பதை சிந்திப்போம்.

**கடவுளின் சட்டங்களை மிகுதியாக்கியதால்**

ஆண்டவர் கடவுள் மோசே மூலமாக பத்துக் கட்டளைகளை கொடுக்கிறார் (விப 20:217) (இச 5:6-21) ஆனால் காலப்போக்கில் இந்த பரிசேயர்களும் மறைநூல் அறிஞர்களும் தங்கள் வசதிக்கும் தங்கள் வளர்ச்சிக்காக சட்டங்களைத் திருத்தி மிகுதியாக்கி 613 சட்டங்களாக மாற்றினார்கள். இதனால் யூத மக்கள் ஏராளமான துன்பங்களை அனுபவித்தார்கள். எனவேதான் ஆண்டவர் இயேசு "சுமத்தற்கரிய பளுவான சுமைகளைக் கட்டி மக்களின் தோளில் அவர்கள் வைக்கிறார்கள்; ஆனால் அவர்கள் தங்கள் விரலால் தொட்டு அசைக்கக் கூட முன்வரமாட்டார்கள். "(மத்23:4) என்கின்றார். சட்டங்களை கொடுக்கிறவர்களாய் மட்டுமே இவர்கள் இருந்தார்கள் ஆனால் சட்டத்தை பின்பற்றாதவர்களாக இவர்கள் மாறிப் போனதால் ஆண்டவர் கடவுள் இவர்கள் மீது கோபம் கொள்கிறார்.

**வெளிவேடக்காரர்களாய் வாழ்ந்ததால்.**

"பரிசேயர்களும் மறைநூல் அறிஞர்களும் தாங்கள் செய்வதெல்லாம் மக்கள் பார்க்க வேண்டும் என்றே அவர்கள் செய்கிறார்கள்; தங்கள் மறைநூல் வாசகப் பட்டைகளை அகலமாக்குகிறார்கள்; அங்கியின் குஞ்சங்களைப் பெரிதாக்குகிறார்கள்" (மத்தேயு 23:5) இப்படியாக தங்கள் வாழ்க்கையில் எல்லாவற்றையுமே ஒரு வெளிப்புற அடையாளத்திற்காக செய்து பெருமையை தேடிக்கொண்ட பரிசேயர்களையும் மறைநூல் அறிஞர்களையும் ஆண்டவர் கடவுள் கண்டிக்கிறார்.



நானோ உம் பேரருளால் உமது இல்லம் சென்றிடுவேன்; இறையச்சத்துடன் உம்மைப் பணிந்திடுவேன் (திபா 5:7)

**தாழ்ச்சி இல்லாமல் வாழ்ந்ததால்**

இந்த பரிசேயர்களும் மறைநூல் அறிஞர்களும் தாழ்ச்சி என்கின்ற புண்ணியம் இல்லாமல் தங்களையே முதன்மைப்படுத்துகிற ஒரு மனநிலையை கொண்டிருந்தார்கள் எனவேதான் ஆண்டவர் இயேசு "விருந்துகளில் முதன்மையான இடங்களையும் தொழுகைக் கூடங்களில் முதன்மையான இருக்கைகளையும் விரும்புகின்றார்கள். சந்தைவெளிகளில் மக்கள் தங்களுக்கு வணக்கம் செலுத்துவதையும் ரபி என அழைப்பதையும் விரும்புகிறார்கள்." (மத்தேயு 23:67) என்று அவர்களின் தாழ்ச்சியற்ற மனநிலையைக் கண்டு அவர்கள் மீது கோபம் கொள்வதை நம்மால் பார்க்க முடிகிறது.

**இயேசுவை இறைமகன் என்று ஏற்றுக் கொள்ளாததால்.**

ஆண்டவர் இயேசு கிறிஸ்துதான் உண்மையான இறைமகன் என்று தெரிந்திருந்தும் எங்கே இயேசுவை இறைமகன் என்று சொல்லிவிட்டால் தங்களுடைய பிழைப்பு போய்விடும், தங்களுக்கான மரியாதையும் தங்களுக்கான பணமும் வராது என்பதற்காக சுயநலத்தோடு இந்த மனிதர்கள் இருந்ததால் ஆண்டவர் கடவுள் அவர்கள் மீது கோபம் கொள்கின்றார்.

**சிந்தனைக்கு**

என் அன்பு சகோதர சகோதரிகளே குருக்களும் மறைநூல் அறிஞர்களும் மற்றும் பரிசேயர்களும் தங்கள் கடமைகளை மீறி தவறான வாழ்க்கை வாழ்ந்ததால் ஆண்டவர் இயேசுவின் கண்டனமும், கோபமும் மற்றும் எச்சரிக்கையும் அவர்களுக்கு எதிராகத் திரும்புகிறது. ஒருவேளை நாமும் கூட இன்றைக்கு இப்படியாக நம்முடைய கடமைகளை தவறுகிற வேளையில் இயேசுவினுடைய கோபமும் அவருடைய எச்சரிக்கையும் கண்டனமும் நமக்கு இருக்கிறது என்பதை நாம் உணர்ந்து கொள்வோம். இன்று இரண்டாவது வாசகத்தில் பவுலடிகளால் குறிப்பிடுகிற தெசலோனிக்க மக்களைப் போல தங்கள் கடமைகளை உணர்ந்து கடவுளுக்கு ஏற்ற நல்லதொரு வாழ்க்கையை வாழ்ந்தது போல நாமும் கடவுளை நம்பி துன்பங்களை ஏற்றுக்கொண்டு வாழ்கிற வேளையில் "அவரே வரப்போகும் சினத்திலிருந்து நம்மை மீட்பார்."

## பொதுக்காலம் 32ம் ஞாயிறு
## 12.11.2023
**(சால. ஞானம் 6:12-16)**
**(1தெச 4:13-18) மத்தேயு 23:1-13)**



**முன்னுரை**

ஆண்டவர் இயேசு தாம் எருசலேமுக்கு போய் மூப்பர்கள், தலைமை குருக்கள், மறைநூல் அறிஞர்கள் ஆகியோரால் பலவாறு துன்பப்படவும் கொலை செய்யப்படவும் மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்பட வேண்டும் என்று தமது பணி வாழ்வின்பொழுது தம் சாவை சீடர்களுக்கு

மும்முறை முன்னறிவித்தார். (மத்தேயு 16:21 28, 17:2123,20:1719) அப்படியாகவே தமது பணி வாழ்வின் நிறைவு பொழிவாக(மத்தேயு 2425)ஆண்டவர் இயேசு தம் சீடர்களுக்கு தமது உயிர்ப்புக்கு பின்னால் நடக்கப் போகிற நிகழ்வுகளை எடுத்துரைக்கிறார். சிறப்பாக உலகத்திற்கு வரப்போகிற கேடுகள் துன்பங்கள் பற்றியும் உலகத்தின் முடிவைப் பற்றியும் (24:16 –26) எருசலேம் ஆலயத்தின் அழிவைப் பற்றியும்(24:13) மிக சிறப்பான விதத்தில் மானிட மகனின் இரண்டாவது வருகை நிச்சயம் என்பதையும் வருகையின் அறிகுறிகளும் அடையாளங்களும் காலத்தைப் பற்றியும் எடுத்துரைக்கிறார் (24:29 31,36 44) அப்படியாகவே அவருடைய இரண்டாவது வருகை வரைக்கும் சீடர்கள் எப்படி தங்களுடைய வாழ்வை அமைத்துக் கொள்ளவேண்டும் என்பதை மிகச் சிறப்பான விதத்தில் அவர்களுக்கு வெளிப்படுத்துவதை நம்மால் உணர முடிகிறது. இந்த சிந்தனைகளை இன்றைய வாசகங்களும் நமக்கு எடுத்துச் சொல்வதை நம்மால் அறிய முடிகிறது.

**1. மானிட மகனின் இரண்டாவது வருகை.**

ஆண்டவர் இயேசு கிறிஸ்து தமது பணி வாழ்வின் நிறைவு பொழிவாக புனித மத்தேயு நற்செய்தி 24 மற்றும் 25 அதிகாரங்களில் பல்வேறு விதமான செய்திகளை விட்டுச் செல்லுகின்றார்.

**உறுதியாக மானிட மகனின் இரண்டாவது வருகை.**

மணமகன் எப்படியாக மணமகளை நோக்கி வருகின்றாரோ, அப்படியாகவே ஆண்டவர் இயேசு கிறிஸ்துவும் நம்மை நோக்கி இரண்டாவது முறையாக வருவது உறுதி என்பதை இன்றைய நற்செய்தி மூலமாக ஆண்டவர் இயேசு எடுத்துரைக்கிறார். (மத்தேயு25:16) யோவான் நற்செய்தியில் பல்வேறு இடங்களில் "நான் போய் உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்த பின் திரும்பி வந்து உங்களிடம் அழைத்துக் கொள்வேன்" (யோவான் 14 :1-6) என்றும் "நான் போகிறேன் பின் உங்களிடம் திரும்பி வருவேன் என்றும்" (யோவான் 14:28) தம் சீடர்களுக்குத் தெரிவிக்கிறார். இன்று இரண்டாவது வாசகத்திலும் "இயேசுவோடு இணைந்த நிலையில் இறந்தோரை கடவுள் அவருடன் அழைத்து வருவார்" (1 தெச 4:14) என்று ஆண்டவர் இயேசுவினுடைய இரண்டாவது வருகை நிச்சயம் என்பதை பவுலடிகளார் விளக்குகிறார்.

**மானிட மகனின் இரண்டாவது வருகைக்கான நேரம்**

இன்றைய நற்செய்தியில் ஆண்டவர் இயேசு குறிப்பிடுவது போல "அவர் வரும் நாளும் வேளையோ மனிதர்களுக்கோ (மத் 25:13) விண்ணகத்தூதருக்கோ, ஏன் மானிட மகனுக்கு கூட தெரியாது. அந்த நாளையும் வேளையையும் பற்றி தந்தை கடவுள் ஒருவருக்கு மட்டுமே தெரியும் என்று நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து குறிப்பிடுகின்றார். (மத் 24:36)

**மானிட மகனின் வருகை எப்படி இருக்கும்?**

நற்செய்தியில் மணமகனுக்காக காத்துக் கொண்டிருந்த மணமகளின் தோழியர்கள் நினையாத நேரத்தில் மணமகன் வந்தது போலவும், ஒரு வீட்டை திருட வருகிற திருடனைப் போலவும் (மத் 24:43) நெடும் பயணம் மேற்கொண்ட உரிமையாளர் திரும்பி வருவது போலவும் (லூக் 12:41-48) மானிட மகனுடைய இரண்டாவது வருகையும் நாம் நினையாத நேரத்தில் இருக்கும். (மத் 24:44)



**2. மானிட மகனின் இரண்டாவது வருகையும்: நமது வாழ்வும்.**

ஆண்டவர் இயேசுவின் இரண்டாவது வருகை நிச்சயம், அது எப்பொழுது வரும் என்று நமக்குத் தெரியாது. நாம் நினையாத நேரத்தில் அது வரும். எனவே அந்த நேரம் வரும் வரைக்கும் நாம் எப்படி வாழ வேண்டும் என்பதை ஆண்டவர் இயேசு கிறிஸ்து நமக்கு எடுத்துச் சொல்லுகிறார்.

**முன்மதி உடையவர்களாய் வாழுங்கள்.**

இன்றைய நற்செய்தியில் தங்கள் விளக்குகளுடன் கலன்களில் எண்ணெயை எடுத்துச் சென்ற முன்மதி உள்ள மணமகளின் தோழிகளைப் போல நாமும் கூட வாழ்க்கை என்கின்ற விளக்கை, நம்பிக்கை என்கின்ற எண்ணெய் ஊற்றி எப்பொழுதும் எரிய வைத்துக் கொண்டிருக்க வேண்டும். அப்பொழுதுதான் ஆண்டவர் இயேசுவின் இரண்டாவது வருகையின் பொழுது அவரோடு நாமும் விண்ணக விருந்திற்கு செல்ல முடியும்.

**விழிப்பாய் வாழுங்கள்.**

திருடனை திருட விடாத வீட்டு உரிமையாளரின் விழிப்பையும் (மத்24:43), மணமகளுக்காக காத்துக் கொண்டிருக்கிற முன்மதியுடைய மணமகளின் தோழியர்களின் விழிப்பையும் (மத் 25:7), வீட்டு பொறுப்பாளரின் விழிப்பையும் (லூக் 12:42),நெடும் பயணம் மேற்கொண்டு உரிமையாளருக்காய் காத்துக் கொண்டிருக்கிற பணியாளருடைய விழிப்பையும் (லூக்:19:27) நாம் பெற்றிருக்கிற வேளையிலே உண்மையிலும் நாம் இயேசுவின் இரண்டாவது வருகைக்கான அழைப்பை நம்மால் கேட்க முடியும். அவரோடு திருமண மண்டபத்திற்குள் போகவும் முடியும் (மத் 25:10)

**கடவுளுக்குஉகந்த வாழ்க்கையை வாழுங்கள் . (1தெச4:112)**

"தூய்மையான, பாவமற்ற வாழ்வும் (1தெச4:3), சகோதர அன்பில் நிலைத்திருப்பதும் (1தெச4:6), நமது வேலையை மட்டும் நாம் பார்த்துக் கொண்டு நம் சொந்த கையால் உழைத்து அமைதியாய் வாழ்வதும் (1தெச4:11) மற்றும் ஆண்டவரில் நம்பிக்கை கொண்டு அதில் முன்னேறுவதுமே (1தெச4:1) கடவுளுக்கு உகந்த வாழ்வாக புனித பவுலடிகளார் இன்று இரண்டாவது வாசகத்தில் குறிப்பிடுகிறார் .இந்த வாழ்க்கையை நாம் வாழ்கிற வேளையில் ஆண்டவர் இயேசுவோடு நாம் உயிர் பெற்று எழ முடியும் என்பதையும், அவரோடு இன்றும் நாம் இணைந்திருக்க முடியும் என்பதையும் பவுலடிகளார் குறிப்பிடுகிறார். (1தெச 4:138)

**முடிவாக**

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவினுடைய இரண்டாவது வருகையை விழிப்போடும் முன்மதியோடும் கடவுளுக்கு உகந்தும் வாழ்கின்ற வேளையில் உண்மையாலுமே நாம் அவரை தகுதியான முறையில் எதிர்கொண்டு அவரின் விண்ணரசில் நுழைய முடியும் என்பதை உணர்ந்தவர்களாய், கடவுளின் ஞானத்தைத் தேடி தொடர்ந்து தெரிந்து தெளிவு பெறுவோம். நமது நம்பிக்கையில் முன்னேறுவோம்.

ஆண்டவர் தம்மை முழு மனத்துடன் நம்பும் அனைவருக்கும் ஆற்றல் அளிக்கிறார் (2 குறி 16:9)

## பொதுக்காலம் 33ம் ஞாயிறு
## 19.11.2023
(நீதிமொழி 31:10-13, 19-20, 30-31)
(1தெச 5:1-6) மத்தேயு 25:14-30)



**முன்னுரை.**

பொதுக்காலத்தின் கடைசி வாரம் ஆண்டவர் இயேசுவின் பணி நிறைவுப் பொழிவை நாம் சிந்திக்க அழைப்பு விடுக்கின்றது. கடந்த வாரம் ஆண்டவர் இயேசுவின் இரண்டாவது வருகையையும் அதற்கான காலத்தையும் பற்றி சிந்தித்தோம். பொதுக்காலத்தின் 33–ஆம் ஞாயிறு ஆண்டவர் இயேசுவின் இரண்டாவது வருகையின் பொழுது என்ன நடக்கும் என்பதை சிந்திக்க அழைக்கிறது.

**தாலந்து உவமையும் மானிட மகனும்.**

இன்றைய நற்செய்தியை மானிடமகனோடும் அவருடைய இரண்டாவது வருகையோடும் ஒப்புமைப்படுத்தி பார்க்கின்ற பொழுது இந்த உவமையை மிக எளிமையான விதத்தில் நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

**நெடும் பயணம் மேற்கொள்ளும் ஒருவர்.**

ஆண்டவர் இயேசுவின் பாடுகள் இறப்பு மற்றும் உயிர்ப்புக்குப் பின்னர் அவர் மண்ணகத்தை விட்டு தம் தந்தையின் உறைவிடமான (யோவான் 14:1) விண்ணகத்திற்குச் செல்லப் போகிறார் என்பதையே இன்றைய தாலந்து உவமையில் செல்வர் ஒருவர் நெடும் பயணம் மேற்கொண்டார் என்று குறிப்பிடப்படுகிறது. இந்த விண்ணேற்றமே ஆண்டவருடைய நெடும் பயணமாகக் கருதப்படுகிறது. இயேசு தம் பணி வாழ்வில் தான் விண்ணேற்றம் அடையப் போகின்றேன் என்பதை பல்வேறு இடங்களில் வெளிப்படுத்தி இருக்கிறார் . இயேசு கிறிஸ்துவின் இரவு உணவின் பொழுது ஆண்டவர் இயேசு தம் சீடர்களிடம்" நான் என் தந்தையின் இல்லத்திற்கு செல்லப் போகிறேன்" (யோவா 14:4) என்றும். நிக்கதேமை இயேசு சந்திக்கிற வேளையில்தான் "தம் தந்தையிடம் செல்லப் போகின்றேன்" என்பதை தெளிவுபடுத்துகிறார். (யோவான்3:13) அப்படியாகவே உயிர்ப்புக்குப் பின்பாக நாற்பதாவது நாளில்தான் சீடர்களுக்கும் முன்பாக தந்தையிடம் விண்ணேறிச் செல்கிறார். (தி தூ 1:11)

**பணியாளர்கள்**

நற்செய்தியில் ஆண்டவர் இயேசு கிறிஸ்து குறிப்பிடுகிற அந்த பணியாளர்கள் இயேசுவின் அன்புச் சீடர்களாக இருக்கிறார்கள் . ஆண்டவர் இயேசு தாம் யாரை அதிகம் அன்பு செய்தாரோ அவர்களையே தம்மிடம் அழைக்கிறார் அவர்களையே தம் சீடர்களாக மாற்றுகிறார்.

**தாலந்து**

ஆண்டவர் இயேசு தம் பணியாளர்களுக்கு

கொடுத்துச் சென்ற தாலந்து அவரின் மீட்பின் நற்செய்தியே ஆகும். "உலகமெல்லாம் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தி பறைசாற்றுங்கள் நான் உங்களுக்கு கட்டளையிட்டது யாவையும் மற்றவர்களுக்கும் கற்றுத் தாருங்கள்" (மத்18:17) என்று தன் அன்புச்சீடர்களுக்கு அவர் அழைப்பு கொடுத்து விட்டுச் செல்கிறார். எனவே இன்றைய நற்செய்தியில் ஆண்டவர் கொடுத்து விட்டுச் செல்கிற தாலந்து என்பது அவருடைய வார்த்தைகளும் அவரின் மீட்புச் செய்திகளுமேயாகும்.

மானிட மகனின் முதல் வருகையின் பொழுது எப்படி திருமுழுக்கு யோவான் "மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள் என்று மக்களை இயேசுவிடம் அவருடைய மீட்புக்கு அழைத்து வந்தாரோ" (மாற்கு 14:14) நாமும் கூட இயேசுவின் இரண்டாவது வருகைக்கு முன்பாக ஆண்டவர் நமக்கு கொடுத்திருக்கிற இந்த மீட்பு நற்செய்தியை (தாலந்தை) நம்மால் முடிந்த மட்டும் அடுத்தவர்களுக்கும் கொடுத்து இயேசுவை அறியாதவர்களையும் இயேசுவிடம் அழைத்து வர வேண்டும் என்பதே சீடர்களின் கடமையாக இயேசு விட்டுச் சென்றிருக்கிறார்.

### தலைவர் மீண்டும் திரும்பி வருதல்.

மானிட மகனின் இரண்டாவது வருகையையே இது குறிப்பிடுகின்றது. கடந்த வாரம் நாம் சிந்தித்தது போல "அவர் மேல் ஏறிச் சென்றது போல மீண்டும் வருவார்" (திருத்தூதர் பணிகள் 1:11) என்கின்ற வானதூதரின் வார்த்தைக்கு இணங்கவும், "நான் உங்களிடம் திரும்பி வருவேன் "(யோவான் 14:3) என்கின்ற இயேசுவின் வார்த்தைக்கு இணங்கவும் ஆண்டவர் இயேசுவினுடைய இரண்டாவது வருகை நிச்சயம் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

### கடனை திருப்பி கேட்டல்



இன்றைய நற்செய்தியில் ஆண்டவர் இயேசு தம் சீடர்களிடம் கடனைத் திருப்பிக் கேட்பது என்பது இயேசுவின் நீதித் தீர்ப்பைக் குறிப்பிடுகிறது. ஆண்டவர் இயேசு தம்முடைய பணிவாழ்வில் தம்முடைய மரணத்தை சீடர்களுக்கு முன் அறிவிக்கின்ற வேளையில் ஆண்டவர் இயேசு தம்முடைய இரண்டாவது வருகையின் பொழுது என்ன செய்யப் போகின்றார் என்பதையும் தெளிவுபடுத்துகிறார். அவர்தாமே "வாழ்வோருக்கும் இறந்தோருக்கும் நீதி தீர்ப்பு வழங்கவும்" (திப 10:42) "ஒவ்வொருவரின் செயலுக்கு ஏற்ப அவர்களுக்கு கைம்மாறு அளிக்கவும்" (மத் 16:27) அவர் மீண்டும் வரப்போகிறார் என்பதை அவ்வப்போது அவர் தெளிவுபடுத்துகிறார்.

### இயேசுவின் தீர்ப்பு

ஆண்டவர் இயேசு தாமே நீதிபதியாக வந்து ஐந்து மற்றும் இரண்டு தாலந்தைப் பெற்றவர்களுக்கு எப்படியாக "நம்பிக்கை குரிய பணியாளர்களே என் மகிழ்ச்சியில் பங்கு கொள்ளுங்கள்" என்று மீட்பைக் கொடுத்தாரோ அப்படியாகவே தங்களுடைய தாலந்தைப் பயன்படுத்தி கிறிஸ்துவை அறியாதவர்களுக்கும் கிறிஸ்துவை அறிவித்து அவர்களை இயேசுவிடம் அழைத்து வருபவர்களுக்கும் அவரின் மகிழ்ச்சியான நிலை வாழ்வு கிடைக்கும் என்பதை அவர் தீர்ப்பாக வழங்குகிறார்.

உங்களைத் துன்புறுத்துவோருக்கு ஆசி கூறுங்கள் சபிக்க வேண்டாம் (உரோ 12:14)

ஆகவே ஆண்டவருடைய வார்த்தைகளைப் பயன்படுத்தாமல் தானும் வளராமல அடுத்தவர்களுக்கும் இயேசுவைப் பற்றிய மீட்பு செய்தியை கொடுக்காமல பொல்லாதவர்களாக சோம்பேறித்தனமாய இருப்பவர்களுக்கு இருளான நரகமே கொடுப்பார் என்பதையே இன்றைய நற்செய்தி வாசகம் குறிப்பிடுகிறது. எனவே நம்பிக்கைக்குரிய பணியாளர்களுக்கு மீட்பும் பொல்லாத பணியாளர்களுக்கு இருளும் நிச்சயம் என்பது அவருடைய தீர்ப்பாக இருக்கும்.

**சிந்திப்போம்**

நமது தாலந்தை பயன்படுத்தி நம்பிக்கைக்குரிய மக்களாய் வாழும் போதும் ,கணவனை அன்பு செய்யும் மனைவியைப் போல மணமகனான இயேசுவை அன்பு செய்யும் பொழுதும், பாவத்தை விட்டு ஒளியின் மக்களாய் வாழும் பொழுதும் நமக்கு இயேசுவின் விண்ணகத்தில் இடம் இருக்கின்றது, நாம் அவரோடு அவரின் மகிழ்ச்சியில் பங்கு கொள்வோம் என்பதை மனதில் கொள்வோம் .

## கிறிஸ்து அரசர் பெருவிழா

(எசே 34:11-12,15-17)
1கொரி 15:20-26, 28, மத் 25:31-46)



**முன்னுரை**

பொதுக்காலத்தின் 34 வது ஞாயிற்றுக்கிழமை "அனைத்துலக அரசர் ஆண்டவர் இயேசு கிறிஸ்து" என்கின்ற திருவிழாவைக் கொண்டாட நமக்கு அழைப்பு விடுக்கின்றது. இருபதாவது நூற்றாண்டின் தொடக்கத்தில் ஐரோப்பிய நாடுகளிடையே நிலவிய சர்வதிகாரிகளின் ஆட்சியும் மறுமுனையில் அறிவியலின் வளர்ச்சியும் உலக மக்களுக்கு மாபெரும் அச்சுறுத்தலாக. இருந்தது. எனவே 1975 ஆம் ஆண்டு திருத்தந்தை பதினோராம் பத்தி நாதர் தன்னுடைய மடல் "quas prihas" மூலமாக "இயேசுவே அனைத்து உலகின் அரசராக இருக்கிறார் அவருடைய அரசாட்சியின் கீழ் நாம் இருக்கிறோம் எனவே யாருக்கும் பயப்படத் தேவையில்லை" என்று உலக மக்களுக்கு ஒரு புதிய நம்பிக்கையை வழங்கினார். எனவே அன்றையிலிருந்து ஒவ்வொரு வருடமும் பொதுக்காலத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமை "ஆண்டவர் இயேசு கிறிஸ்து அனைத்துலகின் அரசர் "என்கிற திருவிழா கொண்டாடப்படுகின்றது.

**திருவிவிலியத்தில் கிறிஸ்து அரசர்**

பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் ஆண்டவர் இயேசு கிறிஸ்து அரசராகப் பிறக்கப் போகிறார் என்பது குறிப்பிடப்பட்டிருக்கிறது. மிகச் சிறப்பான விதத்தில் இறைவாக்கினர் எசாயா அவர்கள் "ஏனெனில், ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளார்; ஓர் ஆண்மகவு நமக்குத் தரப்பட்டுள்ளார்; ஆட்சிப்பொறுப்பு அவர் தோள்மேல் இருக்கும்; அவர் திருப்பெயரோ "வியத்தகு ஆலோசகர், வலிமைமிகு இறைவன், என்றுமுள தந்தை, அமைதியின் அரசர்" என்று அழைக்கப்படும். அவரது

ஆட்சியின் உயர்வுக்கும் அமைதி நிலவும் அவரது அரசின் வளர்ச்சிக்கும் முடிவு இராது; தாவீதின் அரியணையில் அமர்ந்து தாவீதின் அரசை நிலைநாட்டுவார்; இன்றுமுதல் என்றென்றும் நீதியோடும் நேர்மையோடும் ஆட்சிபுரிந்து அதை நிலை பெயராது உறுதிப்படுத்துவார்; படைகளின் ஆண்டவரது பேரார்வம் இதைச் செய்து நிறைவேற்றும்." (எசாயா 9:67) என்று பிறக்கப் போகிற ஆண்டவர் இயேசு அரசராகப் பிறக்கப் போகிறார் என்பதை அவருடைய பிறப்புக்கு முன்பதாகவே தெரிவிக்கின்றார். அப்படியே ஆண்டவர் இயேசுவினுடைய பிறப்பு முன்னறிவிப்பு செய்தியில் அன்னை மரியாவிடம் கபிரியேல் தூதர் இப்படியாகச் சொல்லுகின்றார் "இதோ, கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர்; அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர். அவர் பெரியவராயிருப்பார்; உன்னத கடவுளின் மகன் எனப்படுவார். அவருடைய தந்தை தாவீதின் அரியணையை ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தின் மீது என்றென்றும் ஆட்சி செலுத்துவார். அவருடைய ஆட்சிக்கு முடிவே இராது" என்றார். (லூக்கா நற்செய்தி 1:32–33) எனவே பிறக்கப் போகிற ஆண்டவர் இயேசு தாவீது அரசனுடைய வழி மரபில் வருகிற அரசராக இருக்கப் போகிறார் என்பதை இயேசுவினுடைய பிறப்பு அறிவிப்பின்பொழுது நம்மால் பார்க்க முடிகிறது . " (மத்தேயு நற்செய்தி 2:3) கிழக்கிலிருந்து வந்த மூன்று அரசர்கள் இயேசுவைப் பற்றி ஏரோதிடம் விசாரித்துவிட்டு அரசராகப் பிறந்திருக்கிறவர் எங்கே? அவரது விண்மீன் எழக் கண்டோம். அவரை வணங்க வந்திருக்கிறோம் என்றார்கள். பின்பு சென்று ஆண்டவர் இயேசுவைக் கண்டு அவரை நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கினார்கள். இவ்வாறு பிறந்திருக்கிற ஆண்டவர் இயேசு என்பதை இவர்கள் உலகத்திற்கு வெளிப்படுத்துபவர்களாக இருக்கிறார்கள் அப்படியாக இயேசுவினுடைய பணிவாழ்வின் பொழுது ஏராளமான நபர்கள் "தாவீது மகனே எங்கள் மீது இரக்கம் வையும்" (மத் 15:22) என்று சொல்லி இயேசுவை அரசர் என்று ஏற்றுக் கொள்கிறார்கள். கடைசியாக நல்ல கள்வன் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை பார்த்து "ஆண்டவரே நீர் ஆட்சி உரிமை பெற்று வருகின்ற வேளையில் என்னை நினைவு கூரும்" (லூக்23:42) என்று சொல்லி ஆண்டவர் இயேசுவை அரசராக ஏற்றுக்கொள்கிறார். எனவே இப்படியாக இயேசுவின் பிறப்பிலிருந்து இயேசுவின் இறப்பு வரைக்கும் அவர் அரசர் என்று திருவிவிலியம் குறிப்பிடுவதை நம்மால் பார்க்க முடிகிறது.

**சிந்திக்க**

எனவே அன்பு சகோதர சகோதரிகளே, நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து மாபெரும் அரசராக இருந்தாலும் கூட அவர் தாழ்ச்சியையும் அன்பையும் மன்னிப்பையும் பகிர்வையும் மற்றும் இரக்கத்தையும் கொண்ட நல் அரசனாக வாழ்ந்து வருகிறார்." அரசர் எவ்வழியோ அவ்வழியே அவருடைய மக்களும் இருக்க வேண்டும் என்பதே முறையாக இருக்கிறது" இன்றைக்கு நாம் எல்லோருமே நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துஉடைய பண்பு நலன்களையும் அவருடைய மதிப்பீடுகளையும் கொண்டு அவருடைய ஆட்சியில் வாழ்ந்து கொண்டிருக்கிறோமா என்பதை சிந்தித்துப் பார்ப்போம். ஒருவேளை நாம் அவருடைய பண்பு நலன்களைக் கொண்டு வாழ வில்லை என்றால் நமக்கு

அவருடைய ஆட்சியில் இடமில்லை என்பதை நாம் கண்டிப்பாக புரிந்து கொண்டு மனம் மாறியவர்களாய் அவருடைய ஆட்சிக்கு உகந்த வாழ்க்கை வாழ முயற்சி எடுப்போம்.

இயேசுவின் ஆட்சி மாறுபட்ட ஆட்சியாக இருக்கின்றது இந்த உலகத்தின் அரசர்கள் பட்டங்களையும் பதவிகளையும் செல்வத்தையும் விரும்புகின்ற வேளையில் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து மாறுபட்டவராய் தமக்கென்று ஒன்றும் வைத்துக்கொள்ளாமல் எல்லாவற்றையுமே தம்முடைய மக்களுக்காக கொடுக்கிற அரசராக இவர் இருந்ததால் இவருடைய அரசு மாறுபட்டு அரசாக இருக்கிறது.

மக்களைத் துன்புறுத்தி அவருடைய ரத்தத்தில் தங்களுடைய ஆட்சி அமைத்துக் கொண்டிருந்த அரசர்கள் மத்தியில் தம்முடைய இரத்தத்தை உலகத்தின் பாவத்திற்காக கொடுத்து இந்த உலகத்தை மீட்ட இரட்சிப்பின் அரசர் . ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் திருப்பிக் காட்டும் பொறுமையின் அரசர், ஏழு முறை இல்லை ஏழு 70 முறை மன்னியுங்கள் என்று மன்னிக்கும் அரசர், உங்கள் பகைவர்களையும் அன்பு செய்யுங்கள் என்று சொல்லி பகைவர்களை அன்பு செய்யும் அரசர். தன்னைக் கொல்பவருக்கும் இரக்கத்தை காட்டும் அரசர். எனவேதான் அன்றைக்கு பிலாத்துக்கு முன்னால் ஆண்டவர் இயேசு கிறிஸ்து நின்று கொண்டிருக்கிற வேளையில் "என்னுடைய ஆட்சி இவ்வுலக ஆட்சி போன்றது அல்ல" என்று மிக தெள்ளத்தெளிவாகச் சொல்லுகிறார்.

**திருத்தலத்தின் விருப்பு உறுப்பினராக மாறலாமே**

அன்பான அந்தோணியார் பக்தர்களே, பாலவாக்கம் திருத்தலத்தில் விருப்ப உறுப்பினராக மாறி, உங்கள் உடல் உழைப்பு, செப உதவி, ஆலோசனைகள், நன்கொடைகள் தந்து திருத்தலத்திற்கு உங்கள் பங்களிப்பை தரலாம்.
தொடர்புக்கு: 044- 24493684

## Online Mass

திருத்தலத்தில் நடைபெறும் திருப்பலிகளை உங்கள் கருத்துக்களுக்காக **Online** வழியாக பதிவு செய்யலாம். கீழே உள்ள **UPI** பயன்படுத்தி திருப்பலி கருத்துக்களை பதிவு செய்து கொள்ளவும்.

**திருத்தலத்தைப்பற்றி அறிய**

Web: www.seachorestanthony.org
YouTube: Seashore St. Anthony Shrine
Twitter: User Name : @StAntonyShrine
Instagram: User Name :seashore_st_anthony_shrine
Facebook

YouTube

Instagram

User Name :
Seashore St.Anthony Shrine Palavakkam

நான் உனக்கு நலம் அளிப்பேன்; உன்னுடைய காயங்களை ஆற்றுவேன் (எரே 30:17)

# புனித செசிலியா - பாடற்குழுவினரின் பாதுகாவலி



புனித செசிலியா ஒரு ரோமன் புனிதை. அவரது பிறந்த ஆண்டு தெரியவில்லை, ஆனால் அவர் ரோம் நகரில் கி.பி. 203 இறந்தார் என்று நம்பப்படுகிறது. அவருடைய உடல் அழியா நிலையில் 1599 ஆம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டது. இறந்தும் உடல் அழியாமல் இருந்த முதல் புனிதை இவரே என அறியப்படுகிறது.

செசிலியா பெற்றோருடைய வற்புறுத்தலால் வலேரியன் என்ற வாலிபனை திருமணம் செய்தார். ஆனால் அவருடைய விருப்பமோ ஒரு கன்னியாக இருப்பது மட்டுமே. திருமண நாள் அன்று அவர் ஆண்டவரிடம் "ஆண்டவரே நான் எந்த குழப்பமும் இல்லாமல் என் மனது மற்றும் உடல் தூய்மையாக வைத்திருக்க உதவும்,'' என்று வேண்டினார்.

திருமணம் முடிந்து வீடு சென்ற பின் செசிலியா தன் கணவனிடம் தன்னுடைய கற்பை ஒரு காவல் சம்மனசு கோபத்துடன் காத்து வருவதாகச் சொன்னா.ர். "அப்படி என்றால் உன் காவல் சம்மனசை எனக்கு காட்டு'' என்றான்அவன். அவனிடம்'' கத்தோலிக்க திருச்சபையை விசுவசித்து திருமுழுக்குப் பெற்றால் மட்டுமே நீ அவரைப் பார்க்க முடியும். என்றார் செசிலியா. தன் மனைவி சொன்னதை விசுவசித்து அவனும் திருமுழுக்குப்பெற்றான். அன்று இரவு தன் மனைவி ஜெபிக்கும்போது இரு காவல் சம்மனசுக்கள் அவள் அருகே நிற்பதை கண்டான். அவர்கள் செசிலியா தலையின் மீது ரோஜா மற்றும் லில்லியால் அலங்கரிக்கப்பட்ட கிரீடத்தைச் சூட்டினர். அவனுடைய சகோதரனும் திருமுழுக்குப்பெற்றான். இரு சகோதரர்களும் பணக்காரர்களாக இருந்ததால் வேதசாட்சி மரணம் அடைந்த கிறிஸ்தவ குடும்பங்களுக்கு உதவி செய்தனர். கிறிஸ்தவர்களுடைய சடலங்களை அவர்கள் பக்தியுடன் புதைத்தனர்.

ரோம் நகரிலே கிறிஸ்தவர்களாக இருப்பது என்பது மிகவும் ஆபத்தானது. இரு சகோதரர்களும் கைது செய்யப்பட்டு ஆளுநன் அல்மர்க்கியுஸ் என்பவர் முன் கொண்டுவரப்பட்டனர். அவர்கள் பொய்யான கடவுளை வழிபட மறுத்தனர். எனவே அவர்களை வாளால் வெட்டிக் கொன்றான். இதை அறிந்த செசிலியா அவர்களது உடலை பக்தியுடன் கல்லறையில் வைத்தார்.

இதனால் ஆளுநன் அல்மாக்கியுஸ் செசிலியாவையும் கைது செய்தான். செசிலியாவையும் அவளின் அந்த செயலுக்கு மன்னிப்பு கேட்கச் சொன்னான். ஆனால் செசிலியா அதை மறுத்தார். எனவே குளிக்கும் அறையில் சூடான வெந்நீர் ஊற்றிக் கொல்ல முயன்றனர். ஆனால் அந்த வெந்நீர் குளிர் நீரானது. பின் அவளை தலை வெட்டுண்டு கொலை செய்ய அனுப்பினான். மூன்று முறை வெட்டப்பட்டு ஆனால் முழுவதும் வெட்டப்படாமல் கழுத்து தொங்கி கொண்டு இருந்தது. தலை வெட்டுண்டு மூன்று நாட்கள் உயிருடன் இருந்தார்.

அவள் அந்த மூன்று நாளும் வலியுடன் ஆண்டவரை புகழ்ந்து பாடிக்கொண்டு இருந்தார். இறுதியாக அவர் மூன்று நாட்களுக்கு பிறகு அவர் இறந்தார்.அவருடைய கல்லறை 817 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டு ரோமில் உள்ள அவரது ஆலயத்துக்கு மாற்றப் பட்டது. 1599 ஆம் ஆண்டு மீண்டும் அவரது கல்லறையை திறந்த போது அவரது உடல் அழியாமல் இருப்பதைச் கண்டனர். இப்போதும் நாம் ரோம் நகரில் உள்ள அவரது ஆலயம் சென்றால் அவரது அழியா உடலை அங்கே காணலாம்.



அருட்பணி. **ஜார்ஜ்பெர்ணான்டஸ்**
திருத்தல உதவித்தந்தை

உன்மீது நாம் கொண்ட பேரன்போ நிலை சாயாது (எசா 54:10)

# அதிகாரமா அது என்ன?

**அதிகார உலகமடா**

கொடிகள், கோஷங்கள், கோட்டை போன்ற மாநாட்டுப் பந்தல்கள், கோடி கோடியாகக் கொட்டிக் குவிக்கப்பட்ட லாரிலோடு கும்பல்கள், கொள்கை விளக்கத்தை வெளிப்படுத்தும் பிரியாணிப் பொட்டலங்கள், ஹெலிகாப்டாலிருந்து குதித்து இறங்கும் கையசைப்புகள், மைல் கணக்கில் கார் வரிசைகள், கட் அவுட்கள், கலர் போஸ்டர்கள், அறிக்கைப் போர்கள், அடியாள் கும்பல்கள், கறுப்புப் பூனைகளின் துப்பாக்கிச் சுழற்றல்கள் .....

இப்பட்டியலில் காணப்படும் எல்லா அம்சங்களையும் சுருக்கமாக எப்படிச் சுட்டிக்காட்டுவது?

அதிகாரப் பசி, ஆணவத்து வெறி, அடக்குமுறை சதி!

இந்த அதிகாரத்தை வைத்து ஆணவத்தாண்டவமாடும் ஆசையும் வெறியும் ஏதோ வசதி படைத்தோர் மத்தியில் மட்டுமே காணப்படுவதல்ல. மிகச் சிறிய அளவில் கூட நுணுக்கமான முறையில் உயிர்கள் அனைத்திடமுமே காணப்படும் ஒன்றாகும்.

'ஏய்! நான் ஆம்பளச் சிங்கம் டீ!' இந்த மகா வாக்கியத்திலும் ஆணாதிக்கத்து ஆணவ வெறி தாண்டவமாடுகிறது. 'இந்தத் தடவை நம்ப தொகுதியில் அந்தச் சேரி நாய்கள் ஓட்டுப்போடவுட்டுறுவோமா?' என்னும் வீர வசனத்திலும் அடக்குமுறை சதி அரங்கேறுகிறது. அங்கிபோட்ட சாமியாரு கேட்டா, பொதுநிலையின் தம் பிரின்சிபால் பதவியைக் கொடுத்துவிட்டுப் போக வேண்டியதுதானே' என்னும் நெக்குருகும் அருள்வாக்கில் தொனிப்பது அதிகாரப்பசி!



**புது இலக்கணம்**

இயேசுவின் ஆளுமைப்பண்பு, இம்மாதிரியான அதிகார ஆணவ அடக்குமுறைச் சமன்பாடுகளைப் புரட்டிப்போடுவதாகக் காண்கிறோம். பிறரது உழைப்பினின்று வழியும் வியர்வையைத் தன் பணத்திமிரோடு குழைத்து அதிகாரக் கோபுரம் கட்டுபவன், தீட்டுப்பட்டவன் என்று பொருள்படும் புறவினத்தானாய் கூட்டித் தள்ளப்படுகிறான் (மத்தேயு 20:25), பிறரை ஏறி மேய்வதையே முழுநேரத் தொழிலாகக் கொண்ட அந்தப் பிறவிகளின் மத்தியில் மனிதநேயத்தோடும் அதாவது அனைவரும் தொண்டுள்ளத்தோடும்; பணியாளர்களாகத் தன் நண்பர்கள் விளங்க வேண்டுமென்பதே இயேசுவின் ஆசை, இந்தச் சேவக ஆன்மிகம் தம் உயிரையும் வழங்கும் ஒப்பற்ற அதிகாரமாக விளங்கவேண்டுமென இயேசு விரும்புகிறார் (மத்தேயு 20:25-27; மாற்கு 10:45).

இயேசுவின் சேவக ஆன்மிகம் சுமத்தும் பணிபாதம் கழுவும் ஊழியம் வயிற்றுப் பசியுடன் தவிப்போரின் மேல் பணத்திமிர்

உள்ளோர் சுமத்தும் அசிங்கமான வேலை. வேலக்காரங்க செய்ய வேண்டிய அழுக்கமான பணி. சொல்லப்போனால், காசு பணம் குவிக்க முடியாத பணி யாருமே ஏற்க விரும்பாத பணி. இம்மாதிரியான பணியை விரும்பி ஏற்பதும், அதற்காகத் தன் உயிரைக் கூட தருவதையும் இயேசு அதிகாரமாக (Power) சுட்டிக்காட்டுகிறார்.

### ஒளிந்துகொண்ட அதிகாரம்

பேய் பிசாசுகளைக் கூடத் துணிச்சலோடு அதட்டிக் கேட்டவர் இயேசு. பிணங்களைக் கூட பயப்படாமல் தொட்டுப்பேசியவர் இயேசு. எருசலேம் தலைமைப் பீடத்திலும், அழுத்தமாக நின்று உரோமைக் காலனி ஆதிக்கத்துக் கவர்னரை டென்ஷன் ஆக்கியவர் இயேசு. சான்ஹெரிடின் சங்கம் என்னும் சுப்ரீம் கோர்ட் விசாரணையின் போது தன்னை அறைந்தவனை எதிர்க் கேள்விக்கேட்டு மடக்கியவர் இதே இயேசு. இந்தத் துணிச்சலான பிறவி ஒரேயொரு எதார்த்தத்தைக் கண்டு எதிர்கொள்ள முடியாமல் மலை முகடுகளுக்குள் ஓடி ஒளிந்துகொண்டார் (யோவான் 6:15). வல்லமையுள்ள இறைவாக்குரைப்பவர். பசித்த கூட்டங்களைப் பந்தியில் அமர்த்திப் பால் வார்த்தவர். தொட்டுக் குணமளிக்கும் கைராசிக்காரர், போன உயிரைக் கூட மீட்டு வந்து புதுப்பிறப்பளித்தவர். சட்ட வல்லுநர் போலல்லாமல் அதிகாரத்துடன் போதித்த நம்பகமான நம்மவர் என்றெல்லாம் பேசி, ஊரைக் கூட்டி இயேசுவை அரசராக்கப் பார்த்தனர். இந்த அரண்மனை வாசம் தரும் அதிகாரம் தேவையில்லை என்று ஓடிப்போய் ஒளிந்து கொண்டவர் இயேசு. மக்கள் தந்த அதிகாரத்தை ஏற்றுக்கொள்ள முடியாத தாழ்மை மனப்பான்மை இயேசுவுக்கு இருந்தது எனக் கணக்குப் போட்டால் அது தப்புக் கணக்கு.



### எதிர்ப்புக்கான அதிகாரம்

இயேசுவுக்கு இல்லாத அதிகாரமா? உரோமைய கவர்னர் பிலாத்துக்கு முன் 'என் பலத்தைக் காட்டினால் நீ தாங்கமாட்டாய்' என்னும் பொருளில் எச்சரிக்கை விடுக்கிறார். சொத்து, சுகம், அடாவடி, முதுகு சுரண்டும் பட்டாளம், பணபலம், படைபலம், கொடி கோஷம் என்னும் படாடோபங்கள் யாவுமே தன் அதிகாரத்தைத் தூக்கிப் பிடிக்க முடியாது. இதையே தான் 'என் அரசு இவ்வுலகைச் சார்ந்தது அல்ல' என்னும் வார்த்தைகளினால் வர்ணிக்கிறார். ஆதிக்க வெறியர்களை எதிர்த்தது இயேசுவின் அதிகாரம்.

வெளிநாட்டுக் காலனி அதிகாரத்திற்கு முதுகு சுரண்டி தன் பதவியைக் காப்பாற்றிக் கொண்டு பச்சோந்தித்தனமாக அட்ஜஸ்ட் பண்ணிக் கொள்ளும் உள்நாட்டு முதலாளிகளான தலைமைக் குருக்கள், மூப்பர் போன்ற சதுசேயரின் கோவில் பிசினஸைக் கண்டித்து 'திருடர்களே!' என்று நெத்தியடி கொடுத்தது இயேசுவின் அதிகாரம்! இயேசுவின் காலத்துப் பாலஸ்தீனத்தில், தன் ஆட்சியை யாரும் கலைத்துவிடக்கூடாதென உரோமையின் காலடியில் கிடையாய்க் கிடந்த கிழட்டு நாஜீயான ஏரோது என்னும் உள்ளூர் ஜமீந்தாரை குள்ளநரி எனக் கூசாமல் குறிப்பிட்டது இயேசுவின் அதிகாரம்!

### எதுதான் அதிகாரம்?

'தோரா என்னும் சட்டம் சொன்னது இது.

ஆனால் என்ன? இதோ, நான் சொல்லுவது இது!' என்று அழுத்தமாக ஆறுமுறை மத்தேயு வாயிலாக (5:22, 28, 34, 39, 44) இயேசு புதிய சட்டத்திருத்தத்தைக் கொண்டு வருவதைக் காண்கிறோம்.

தோரா என்னும் சட்டம் தெய்வத்தின் திருவுளம். இதிலிருப்பது ஐந்நூல். இந்த ஐந்நூலுக்கு ஆறு சட்டத்திருத்தம். இந்த இயேசுவின் சட்டத் திருத்தங்கள், தோராத் திருச்சட்டத்தை அழிக்க வந்தவை அல்ல. மாறாக நிறைவேற்ற வந்தவையே (மத்தேயு 5:17). அதாவது தோரா சட்டம் எந்த நோக்குடன் கடவுளின் மூச்சாக, முழு அதிகாரத்தோடு இயேசு செயல்பட்டார் என்பதை அவரது ஆளுமைப்பண்புகளும், ஒவ்வொரு சொல்லும் செயலும் வெளிப்படுத்தின.



பணம் குவிந்தால் அதிகாரம்

படை குவிந்தால் அதிகாரம்

ஓட்டு குவிந்தால் அதிகாரம்

புகழ் குவிந்தால் அதிகாரம்

பதவி குவிந்தால் அதிகாரம்

வெறுமனே மானிட உடலுடன் இயேசு இந்தக் குவித்தல் பண்பாட்டைப் பார்வையிட்டு 'சாத்தானே அப்பாலே போ' என அதிகாரத்தோடு மிரட்டினால் அவை சூனியமாகத்தான் வேண்டும். தாழ்த்தப்பட்ட ஏழையான உழைக்கும் வர்க்கத்துக்கு இருக்கிற ஒரே அதிகாரம் இதுதான் இயேசு எதிர்த்த அத்தனை சாத்தான்களுக்கும் நானும் கட்டுப்படவே மாட்டேன். இயேசு தந்த இந்த அதிகாரம் ஏழையருக்குள்ள அதிகாரம்.



அ. மரிய அருள் ராஜா சே.ச.


**வளர்ச்சிப் பணிகளுக்கு உதவுங்கள்**

திருத்தலத்தில் உள்ள வல்லமையுள்ள புனித அந்தோணியார் கெபியானது அழகுபடுத்தப்பட உள்ளது. இதனுடைய செலவு ரூ. 3 லட்சம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது விருப்பம் உடைய புனித அந்தோணியார் பக்தர்கள் திருத்தல தந்தையர்களை தொடர்பு கொள்ளலாம்.

96299 99440 – திருத்தல அதிபர்

93607 97258 – திருத்தல உதவி அதிபர்

80129 18202 – திருத்தல உதவி அதிபர்

**ஜெப உதவி மையம்**

அன்பான சகோதர சகோதரிகளே உங்கள் விண்ணப்பங்களை கடவுளிடம் ஒப்புக்கொடுத்து உங்களுக்காக ஜெபிக்க ஜெப உதவி மையம் செயல்படுகிறது. ஜெப உதவி தேவைப்படுபவர்கள் திருத்தல உதவி பங்குத்தந்தை அருட்பணி. ஜார்ஜ் (8012918202) அவர்களை தொடர்பு கொள்ளவும்.

உங்கள் விண்ணப்பங்களை கீழ்வரும் முகவரிக்கு எழுதி அனுப்பவும்.

கடற்கரை புனித அந்தோணியார் திருத்தலம்
எண் 38, எம்.ஜி.ஆர். சாலை
பாலவாக்கம், சென்னை- 41

# அம்மா அங்கே போ போ... (சிறுகதை)



முதியோர் இல்லத்தின்முன் முரண்டு பிடித்துக் கொண்டிருந்த அந்த அறுபது வயது கடந்த பெண்மணியை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு அந்தக் காட்சி பரிதாபமாகவே இருந்தது.

தன்னை மருத்துவப் பரிசோதனைக்கு அழைத்துப் போவதாகச் சொல்லிவிட்டு தன் மகன் ஜோசப்பும் அவன் நண்பன் ரவியும் இங்கே வந்து காரை நிறுத்திவிட்டு அலுவலக அறைக்குச் சென்றபோது காரிலிருந்து இறங்காமல் உள்ளே அமர்ந்திருந்த அந்த அம்மாவுக்கு விஷயம் புரியவில்லை. உள்ளே இருந்தபடி சுற்றுமுற்றும் பார்த்தபோதுதான் தான் கொண்டு வரப்பட்டிருக்கும் இடம் ஒரு முதியோர் இல்லம் என்பது புரிந்தது.

அந்த காம்பவுண்டுக்குள் எங்கே பார்த்தாலும் முதியவர்கள் நடமாட்டமே இருந்தது. பார்வையாளர்கள் சிலரும் அங்கே தென்பட்டனர். எதற்காக ஜோசப் தன்னை இங்கே அழைத்து வந்திருக்கிறான்? யாரையாவது பார்த்துவிட்டு வந்தபின்னர் தன்னை மருத்துவமனைக்கு அழைத்துப் போகப் போகிறானா? மௌனமாக வெளியே நோட்டம் விட்டபோது மகன் ஜோசப் இன்னொரு மனிதனுடன் அங்கு வந்து நின்றபடி “அம்மா, காரிலிருந்து கொஞ்சம் இறங்கும்மா” என்றான்.

மறுபேச்சுப் பேசாமல் காரிலிருந்து இறங்கிய அந்த அம்மாவைக் கண்ட ஜோசப்புடன் வந்தவர் “இவருக்கு அட்மிஷன் போட்டு விடலாம்' என்று ஆங்கிலத்தில் கூறுவதன் அர்த்தம் புரிந்த அந்த அம்மா முகம் வாடிப் போனவராய், 'எனக்கா அட்மிஷன்?' என்று தனக்குள் கேள்வியை எழுப்பிக் கொண்டபோதுதான் நடப்பதன் விபரீதம் புரிந்தது. சட்டென்று காருக்குள் ஏறி அவர் அமர்ந்து கொண்டார்.

காரின் கதவைத் திறந்த மகனுடன் அவன் நண்பனும் சேர்ந்துகொள்ள இருவருமே “ஒன்றும் பயப்பட வேண்டாம், இரண்டு நாள் இங்கே தங்கியிருங்கள். வந்து கூட்டிப் போவோம்” என்றனர். அந்த அம்மா பயந்தபடி “ஜோசப், என்னை இங்கேயா சேர்க்கப் போகிறாய்?” என்றபடி திறந்திருந்த காரின் கதவைப் பிடித்துக் கொண்டு “ஜோசப், வேண்டாம்பா. நான் வீட்டின் ஒரு மூலையில் அடங்கி உட்கார்ந்து விடுகிறேன். உன்னையோ உன் மனைவி அனிதாவையோ யாரையுமே எதுவும் கேட்கமாட்டேன். என்னால் உங்களுக்குத் தொல்லை இருக்காது. என்னை இங்கே விட்டு விட்டுப் போய்விடாதே” என்று கெஞ்சினார்.

“பயப்பட ஒன்றுமில்லையம்மா. நானும் அனிதாவும் ஒருவாரம் வெளிநாடு போகிறோம். உன்னைப் பார்த்துக் கொள்ள முடியாததால் இங்கே விட்டிருக்கிறேன்” என்றவனிடம் “இரண்டு நாள் என்றாயே, இப்போது ஒருவாரம் என்கிறாயே ஜோசப்” என்று கேட்டபடி கண் கலங்கினார் அந்த அம்மா.



“அம்மா நான் உன்னை ஏமாற்றுவேனா, ஒருவாரத்துக்குள் நாங்கள் திரும்பி வந்து உன்னைக் கூட்டிப் போகிறோம்” என்றான். தன் மகனை நம்பாத அந்த அம்மா மீண்டும் கெஞ்சினார் “என்னால் யாருக்கும் தொல்லை இல்லாதபோது என்னை எதற்காக இங்கே தங்கச் சொல்கிறாய்? உன் மகனை நான் நன்றாகப் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறேன். ஒருவாரம் நான் தனியே வீட்டில் இருந்து கொள்கிறேனே. உன் அப்பா உயிரோடு இருந்தால் இப்படி என்னை அனாதையாக இங்கே கொண்டு வந்து சேர்ப்பாரா? அப்பா ஜோசப் உன்னை கெஞ்சிக் கேட்கிறேன். தயவு செய்து என்னை இங்கே சேர்க்காதே” என்று மகனின் கைகளைப் பிடித்துக் கொண்டு கண்களில் நீர் மல்கக் கெஞ்சினார்.

தன் தாயின் விடாத கெஞ்சலையும் மீறி ஒருவழியாக அவரை இல்லத்தில் சேர்த்துவிட்டு வந்த ஜோசப்புக்கு மனம் இருப்புக் கொள்ளவில்லை. திரும்பும்போது வழியில் உடன் பயணித்த நண்பன் ரவி “எனக்கென்னமோ ஜோசப், அம்மா பிடிவாதமாக அழுததுதான் மனதை என்னவோ பண்ணுகிறது. போன வாரம் என் மகள் மீனுக்குட்டியை எல்கேஜியில் சேர்க்கும்போது முதல் நாள் வகுப்பிலேயே அழுது கொண்டிருந்திருக்கிறாள். மறுநாள் பள்ளியில் கொண்டு விடும்போதே காரிலிருந்து இறங்காமல் அவள் அடம் பிடித்து அழுதாள் பாரேன் அந்த ஞாபகம்தான் வந்தது. சிறுபிள்ளையாய் இருக்கும்போது பள்ளிக்கூடம் எதிர்காலத்துக்கு உதவும். அதைத் தவிர்க்க முடியாது. வயதானபிறகு முதியோர் இல்லம் என்பது ரொம்பக் கஷ்டம்தான்” என்று சொல்லிக் கொண்டே போக, ஜோசப் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான்.

ரவியோ “அம்மா காரிலிருந்து இறங்காமல் பிடிவாதமாய் அழுதபோது அருகில் இருந்த ஒரு முதியவர் சொன்னது இப்போது நினைவுக்கு வரவேதான் இதைச் சொன்னேன். மகனை சின்ன வயதிலே இந்த அம்மா இப்படித்தான் கதறக் கதற பள்ளிக்கூடத்தில் கொண்டு விட்டிருப்பாள் போலிருக்கிறது, அதற்குத்தான் இப்போது மகன் பழி வாங்குகிறானோ என்னவோ என்று சொன்னார்” என்றபடி ரவி புன்னகைக்க, ஜோசப் அமைதியாக இருந்தான்.

அவன் தொடர்ந்தான் “ஜோசப், இதில்கூட ஆணாதிக்கம் இருக்கிறது பாரேன். மகன்கள்தான் தங்கள் பெற்றோரை முதியோர் இல்லங்களில் சேர்க்கிறார்கள். எந்த மகள்களாவது இப்படிச் செய்கிறார்களா? அப்படி நடந்தால் அதுகூட அபூர்வம்தான்” என்று கூற ஜோசப்பின் முகத்தில் எரிச்சல் தென்படவே, பேச்சை வளர்க்காமல் மௌனமானான் ரவி.

வீட்டுக்கு வந்த ஜோசப்பிடம் “அப்பா, பாட்டி எங்கேப்பா?” என்று கேட்டான் அவனுடைய ஐந்து வயது மகன் அலெக்ஸ். அவன் பதில் சொல்வதற்குள் அவனுடைய அம்மா அனிதா தன் மகனை அதட்டினாள். “முதலில் ஒழுங்காகப் படி. பாட்டி வருவாங்க” என்றாள்.

ஆண்டவருக்கு அஞ்சுபவர்கள் எதற்கும் நடுங்கவோ தயங்கவோ மாட்டார்கள் (சீஞா 34:14)

தன் கணவனைத் தனியே அழைத்துப் போனவள் "என்னங்க, அத்தையை நல்ல முதியோர் இல்லத்தில்தானே சேர்த்தீங்க? ஏன் உங்கள் முகம் இப்படி வாடிப் போயிருக்கிறது?" என்று கேட்டபோது "இத்தனை வருடம் கூட இருந்தவங்களைப் பிரிவது கஷ்டம்தானே" என்றான். அனிதா மௌனமானாள்.

ஜோசப்பால்தான் மௌனமாக இருக்க முடியவில்லை. இரண்டு நாட்களாக அலுவலகத்தில் அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. அம்மா உடன் இருப்பதால் எந்த ஒரு வெளிக்காரியத்தையும் கவனிக்க முடிவதில்லை. அனிதாவும் அடிக்கடி வெளியூருக்குச் செல்லும் உயர் பதவியில் இருக்கிறாள். எனக்கும் வெளியூரில் மாதத்தில் ஒரிரு நாள் வேலை இருக்கும். முதல் வகுப்புப் படிக்கும் மகன் அலெக்சுக்கு வேண்டுமானால் பள்ளியில் விடுமுறைக்கு சொல்லிக் கொள்ளலாம். எங்கு போனாலும் அம்மாவைக் கூட்டிக் கொண்டு போவதென்பது ஆகாத காரியம். அவராலும் முன்னைப்போல் தன் பேரனைப் பார்த்துக் கொள்ள முடிவதில்லை. யோசித்துதான் செய்தேன், இப்போது அதே யோசனையாகி விட்டதே... இதையெல்லாம் தாண்டி அம்மாவை வீட்டுக்கே அழைத்து வந்து விட்டால் என்ன? மனம் குழம்பிக் கொண்டிருந்தது.

மறுநாள் மாலை வீடு திரும்பியபோது மகன் அலெக்சுக்கு வீட்டுப் பாடம் சொல்லிக் கொண்டிருந்த அனிதா, களைத்துப் போய் வந்த கணவனுக்கு காபி எடுக்கப் போயிருந்தபோது அலெக்ஸ் உரத்த குரலில் படித்துக் கொண்டிருந்தான்.

அம்மா இங்கே வா வா

ஆசை முத்தம் தா தா

இலையில் சோறு போட்டு

ஈயைத் தூர ஒட்டு

உன்னைப் போன்ற நல்லார்

ஊரில் யாவர் உள்ளார்

என்னால் உனக்குத் தொல்லை

ஏதும் இங்கே இல்லை....

மகன் படிக்கப் படிக்க மனமுடைந்து போனான் ஜோசப். சோறு போட்ட தாயை நான்தான் தூர விரட்டி விட்டேனே. தன்னால் யாருக்கும் தொந்தரவு வராது என்று சொல்லி அழுதாரே...




அன்றிரவு அவன் உறங்கவில்லை. மறுநாள் காலையில் முதியோர் இல்லத்திற்கு தன் மனைவியோடு சென்ற ஜோசப், தன் அம்மாவிடம் சொல்லிக் கொண்டிருந்தான். "அம்மா சொன்னபடி உன்னை கூட்டிப் போக வந்துவிட்டேன் பார்த்தியாம்மா".

அந்த அம்மா இப்போதும் அழுதார், அது ஆனந்தக் கண்ணீர்!

ரோனா ஆல்பர்ட்



எளியோர்க்கு இரக்கங்காட்டி அவர்களைப் பொறுத்தருள்வார் (சாஞா 6:6)

# அவள் ஒரு தேவதை



ஒரு கருவை வயிற்றில் சுமப்பது என்பது ஒவ்வொரு பெண்ணுக்கும் ஒரு வரம். அது ஒரு தவம் என்றுதான் சொல்ல வேண்டும். அப்படித்தான். தன் வயிற்றில் குழந்தையைச் சுமந்திருக்கும் அந்தப் பெண்ணும் நினைத்தாள். ஆனால், குழந்தையைப் பெற்றெடுத்த பிறகுதான் தெரிந்தது. அவள் குழந்தைச் சுமையை இறக்கிவைக்கவில்லை. இடியைச் சுமந்து கொள்ள அவளுக்கு அழைப்பு கிடைத்திருக்கிறது என்று.

ஆம்,! காதல் திருமணத்தில் வாழ்க்கையைத் தொடங்கி புகுந்த வீட்டிற்குப் போனபொழுதுதான் தெரிந்தது. இன்பம் கனவில்... துன்பம்... எதிரில் காண்பதே வாழ்க்கை என்பது. பெரிய குடும்பத்தில் வாழ்வைத் தொடங்கியது மட்டுமல்ல, உடல் சார்ந்தஎல்லாப் பொறுப்புகளும், கடமைகளும் இவளைச் சார்ந்ததுதான். ஆயினும், அன்பின்கணவனின் பக்கத் துணையால் அனைத்தையும் சுகமான சுமையாக ஏற்றுக்கொண்டவளுக்கு ஒரே ஆண்டில் இடிவந்து விழுந்தது. பிறந்த குழந்தை மனநிலைசரியில்லாத மாற்றுக் கண்ணோடு கால் சற்றே நடக்கமுடியாத பலவீனத்தோடு, பேச்சும் சரியாக வராத ஒரு பெண் குழந்தையைத் தான் பெற்றெடுத்திருக்கிறேன் என்று அறிந்தபோது நொறுங்கிப் போனாள். அவளது ஒரே செபம் கண்ணீரோடு என் மகள் குணமாக வேண்டும் என்பதுதான். தேடாத மருத்துவர் இல்லை. செய்யாத மருத்துவம் இல்லை. அனைத்தும் தோல்வியே! கல்வித்தகுதிக்கு ஏற்ற வேலைவாய்ப்பும் இல்லை.

குடும்பத்தில் முழுப்பொறுப்பேற்று அனைத்து வேலைகளைச் செய்தாலும், பொருளாதாரரீதியாக அவர்களின் தேவைகளைச் சந்தித்தாலும், ஏனோ தன் குழந்தையை மட்டும் யாரும் பார்த்துக்கொள்ள முன்வருவதில்லை என்ற வருத்தமே அவளைக் கண்ணீர்கடலில் மூழ்கச் செய்தது. வெறுமையையே வாழ்வானது.இதற்கிடையில் மருத்துவர் மற்றும் நல்லவர் பலரின் ஆலோசனையின் பேரில் மீண்டும் ஒரு குழந்தை பாக்கியம் கிடைத்தது. அதுவும் நான்கே மாதங்களில் இறந்துபோக மீண்டும் அடி. அவள் அடிவயிற்றில் விழுந்தது. கடைசியில் கடவுளை இறுக்கமாகப் பற்றிக் கொண்டதோடு கடவுளைச் சார்ந்த நல்மனிதர்கள் தந்த இறைவார்த்தையின் வாக்குறுதியில் நம்பிக்கை வைத்து பத்து ஆண்டுகள் கழித்து ஆண்மகனை ஆரோக்கியமாகப் பெற்றெடுத்தாள். நல்ல மனிதர்களின் துணையால்அரசு உதவிபெறும் பள்ளியில் ஆசிரியர் வேலை வாய்ப்பும் கிடைக்க பொருளாதாரத்தில் தன் குடும்பத்தை மேம்படுத்துவதிலும் தனக்கென்று ஒரு வீடுகட்டுவதிலும்

கணவனோடு இணைந்து ஈடுபட்ட அவளுக்கு மீண்டும் வந்து இறங்கியது ஒரு இடி. அது இடியல்ல... அவளுடைய வாழ்வையே நிர்மூலமாக்க வந்த இயற்கை செய்த சதி. நல்ல ஆரோக்கியத்தோடு இருந்த அவளது அன்பின் கணவர் அனைத்துத் துன்ப துயரங்களிலும் தோளோடு தோள் கொடுத்து இறுதி வரை துணையிருப்பேன் என்றவர், உயர் இரத்த அழுத்தத்தாலும் மூளைக்குச் செல்லும் நரம்பு வெடித்து மூன்றே நாளில் மரணத்தைத் தழுவிவிட உலகமே இருண்டு போனது. தனிமை ஒருபக்கம், மனவளர்ச்சி இல்லாத குழந்தையின் வளர்ப்பு மறுபக்கம், பத்து வயதே ஆன தன் மகனை எப்படி வளர்க்கப் போகிறோம் என்ற கவலை ஒரு பக்கம் , புகுந்த வீட்டின் குடும்பபாரம், கடமைகள் மறுபக்கம் என்று திரும்பும் திசையெங்கும் சவால்கள் என அவளை வாழ்க்கையின் ஓரத்திற்கே அழைத்துச் சென்றது. கவலையும் கடமைகளும் அவளதுஉடலை வாட்டி வதைக்க, துன்பங்கள், அவள் மனதை உறுதியாக்கிக் கொண்டே வந்தது.

கவலைகளை கவனமாய் ஒதுக்கி வைத்துவிட்டு சவால்களை எதிர்கொள்ளத் தொடங்கினாள். பிள்ளையை நன்கு வளர்த்து அவன் தந்தையின் அரசு வேலையைப் பெற்றுத் தந்தாள். அங்கேயும் போராட்டம். தாயையும் மகனையும் விரட்டி விரட்டி அலைக்கழித்தது. அலுவலகத்தில் மகனுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளையும் மன உளைச்சலையும் தாய்க்காக பொறுமையோடு சகித்தாலும் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குமேல் தாங்க முடியாத மகன் தாயின் மடியில் தலைசாய்த்து கண்ணீர் வடிக்க மகனை வேலையிலிருந்து நிறுத்தி மேற்படிப்பு படிக்க வைத்து நல்லதொரு வேலை வாய்ப்பையும் பெற்றுத்தந்தார். இடையில் மகளின் உயிருக்குப் பெரும் ஆபத்து வந்தது. மனவளர்ச்சி அற்ற பெண்ணின் உயிருக்குச் செலவு செய்வது வீண் என்று மருத்துவர்களே ஆலோசனை கூறியும் கூட பல இலட்சங்களைத் தனக்கென்றுவைக்காமல் கணவரது ஒய்வூதியப் பலன்கள் முழுவதையும் மகளுக்குச் செலவழித்து குணப்படுத்தினாள். இத்தனைப் போராட்டங்களையும் தாண்டி ஒய்வு பெற்ற பின்பும் ஓடிக் கொண்டிருக்கும் இந்தப் பெண்ணிற்குப் பலமாய் அமைந்தது நட்போ, உறவோ,பெற்றோரோ, உடன்பிறப்புகளின் துணையிருப்போ, அல்ல. கடவுளின் இரக்கத்தின் துணை, திக்கற்றவர்களுக்கு இறைவன் தரும் உடன் இருப்பு மட்டுமே. தனது சிக்கல்களை மட்டும் எண்ணி இருந்து விடாமல் வீட்டை விட்டு சமூகத்திற்கு வந்தார்.தன் வாழ்வில் ஏற்பட்ட ஒவ்வொரு போராட்டக் காலத்திலும் கடவுள் தேவதூதர்களாய் பலரை அனுப்பி உதவியதற்கு நன்றியாக தன்னுடைய இனிய குரல்வளத்தால் கடவுளை மாட்சிமைப்படுத்தி இசைத்தட்டுகள் வெளியிட்டும் பல இசைக்குழுக்களோடு இணைந்து பணியாற்றியதோடு **EXODES** இசைக்குழு மூலம் பழைய கீர்த்தனைகளை உலகம் முழுவதும் பரப்பும் பணியில் இன்றும் ஈடுபட்டு வருகிறார்.



இவை மட்டுமல்ல தன்னைப் போன்று தனிமையிலும் வெறுமையிலும் துயரப்படும்,தடுமாறும் பெண்களுக்கு செப ஆலோசனை வழங்குவதோடு திருமண ஒழுங்குபடுத்தும் பணியிலும் ஈடுபட்டு வருகிறார்.

உன்மீது நீ அன்பு கூர்வதுபோல் உனக்கு அடுத்திருப்பவர்மீதும் அன்புகூர்வாயாக (மத் 22:33)

இவை மட்டுமல்ல பங்குத்தளத்தில் அனைத்து நிலைகளிலும் கணவனோடு இருந்த காலத்திலும் இல்லாத நிலையில் மகனையும் ஈடுபடுத்தி, எல்லாப் பதவியிலும் தன்னை நிலை நிறுத்திக் கொண்டு இன்னும் பணியாற்றி வருகிறார்.

நல்ல ஆசிரியராய், பங்கில் ஆற்றலோடு செயற்படும் ஊழியக்காரியாய் தன் திறமையால் சமூகத்திற்கு மறையைப் பரப்பும் சீடத்தியாய், தேவையறிந்து உதவும் பெண்ணாய் செயல்படும் இவர் யார்? அவர் வேறு யாருமல்ல ஊடகத்திற்கு முன்னால் தெரியாத மறைக்கப்பட்ட பெண்களில் ஒருவராக வெஸ்லி மேல்நிலைப் பள்ளியில் பணியாற்றி ஓய்வு பெற்ற இசைக்குயில் என்று செல்லமாய் அழைக்கப்பெறும் திருமதி. ஹெலன் ஜோசுவா அவர்கள். அவர்களின் அன்பு மகள் அனித்தா, மகன் இம்மானுவேல்.

இங்கே அனித்தாவைப் பற்றி சொல்லியே ஆக வேண்டும். கோப வேகத்தில்அவளைக் கட்டுப்படுத்த யாராலும் இயலாது. இன்று வரை ஒரு குழந்தைக்கு செய்யும்அனைத்துப் பணிவிடைகளையும் 39 வயது பெண்ணுக்கும் செய்ய வேண்டிய கடமைஅவர்களுக்குரியது. இரவு படுக்கையிலேயே சிறுநீர் கழிப்பது முதல் அனைத்திலுமேஅவள் ஒரு குழந்தையே. அத்தனை பணிகளையும் இன்றும் தான் ஒருத்தியேசெய்வதோடு தன் பிள்ளைக்கு அன்பின் தாயாய், அனித்தாவிற்கு அவள் ஒருதேவதையாய் வலம் வருகிறார்.

ஆம் "முப்பது வருடம் வாழ்ந்தவனுமில்லை; முப்பது வருடம் அழிந்தவனுமில்லை" என்பார்கள். துன்பமும், இன்பமும், சோதனைகளும், வேதனைகளும், வரவும், செலவும், பிறப்பும், இறப்பும், நோயும், சுகமும் மாறி மாறிவருவது இயற்கையே! பணபலம் கொண்டவன் சவால்களைப் பணத்தைக் கொண்டு சமாளிக்கிறான். திறன் கொண்டவன் தன் திறனால் சமாளிக்கிறான். எல்லாம் இருப்பவன் தன்னை கடவுளாக்கிக் கொள்கிறான். எதுவும் இல்லாதவன் இருப்பதையும் நிலையில்லாதது என்று எண்ணுபவன் கடவுளையே தன் பலமாக்கிக் கொள்கிறான். "தன்வலுவின்மையாலும் இகழ்ச்சியிலும் இடரிலும் இன்னலிலும் நெருக்கடியிலும் கிறிஸ்துவை முன்னிட்டு நான் அகமகிழ்கிறேன். ஏனெனில் நான் வலுவற்றிருக்கும்போது வல்லமை பெற்றவனாக இருக்கிறேன்" (2கொரி 12:10) என்ற பவுலடிகளாரின் அனுபவம்மிக்க வார்த்தை கடவுளுக்காக தன்னையே அர்ப்பணித்த ஒரு மாமனிதனின் வாழ்வை நமக்குக் காட்டுகிறது. அப்படியானால் நான் யாராய் இருக்கிறேன்...?

போராட்டமே கூடாது என்று நினைக்கிறேனா? சுமைகளை சுகமாக எண்ணுகிறேனா? அல்லது துன்பமா வரட்டும் பார்க்கலாம் என்று துணிந்து நிற்கிறேனா? சிந்திப்போம் ~ அடுத்த இதழில் சந்திப்போம். புதுமை... பூக்கள்... மலரும்...!



முனைவர்
ம.டார்த்தி செல்வ மேரி

நான் துன்பத்தில் நடுவில் நடந்தாலும் என் உயிரைக் காக்கின்றீர் (தி.பா 138:7)

# உறவுகள் 3 - தொடர்கதை

பணி. ஜான் பிரான்சிஸ்
உளவியல் நிபுணர்





"மனம் என்னும் மாடு அடங்கின்
தாண்டவக்கோனே!
முத்தி வாய்த்ததென்று எண்ணேடா
தாண்டவக்கோனே!"
(இடைக்காட்டு சித்தர்)

குடும்பம் என்னும் நத்தைக் கூட்டை சுமந்துகொண்டு அதன் பாரம் தாங்காமல் பரிதவிக்கும் ஜமீலாவுக்கு ஆற்றுப்படுத்துதல் தேவையா? அல்லது தொடர்ச்சியான கவனிப்பும், அறிவுறுத்தலும் மட்டும் போதுமானதா என்று சென்ற இதழில் வினவினோம்.

சற்றே ஆழத்தில் சென்று இவ்வினாக்களை அலசுவோம்!

குடும்பத்தில் எழும் பிரச்சினைகளுக் கெல்லாம் ஊற்றுக்கண் எங்கே உள்ளது? என்று முதலில் தெரிந்து கொள்வது நல்லது!

ஆம், திருமணமாகும் எவரும் வெவ்வேறு கோள்களில் வாழ்ந்து விட்டு வந்து திருமண உறவில் புதிதாய் இணையப் போவதில்லை. திருமணத்தால் விளைந்த குடும்ப உறவில் தான் முதன் முதலாக அவர்கள் உருவாகிறார்கள் எனும் நோக்கில் குடும்பவாழ்வின் பல துன்ப சூழல்களை தம் பெற்றோர்களிடம் அவர்கள் பார்த்துப் பழகி இருக்கிறார்கள். அதனால்தான் என்னவோ தன் தந் தையைப் போலநற்குணமுடைய ஒரு கணவனையோ, தன் தாயைப் போலபாசத்தால் மிகுந்த ஒரு மனைவியையோ திருமண உறவில் எதிர்பார்ப்பது என்பது நியாயமானதாகவே உள்ளது. இதை திருமணம் புரிவோரின் ஆழ்மனத் தேடலாக (subconscious) கருதுவர் உளவியலர்.

குடும்பத்தில் 20 ஆண்டுகளுக்கு மேல் வாழப் பழகிய புதிய இணையர் (New Couple) ஏற்கனவே ஒரு பட்டறையில் பட்டை தீட்டப்பட்டுள்ளனர் என்ற நிலையோடு தான் அவர்களை நாம் பார்க்க வேண்டியுள்ளது. பிறகு ஏன் அவர்கள் புதுமண வாழ்வில், பிள்ளைகள் வளர்த்தெடுப்பதில், குடும்ப வருமானத்தை நிர்வகிப்பதில் என பலதரப்பட்ட கடின சூழல்களை எதிர்கொள்வதில் சிரமம் ஏற்படுகிறது என்றால், புதிய இணையர்களின் தனிப் பண்புகள் (individual characteristics) மற்றும் சூழலுக்கேற்றார்போன்ற தலைமைப்பண்பு (Situational leadership) இப்போது மேலெழுந்து வருகிறது. தன் குடும்பத்தை தவிர்த்து வெளியில் அவர்கள் சந்தித்த குடும்பங்களின் வாழ்வு நிலையும் (Vicarious Learning) கூட அவர்களது மனவளர்ச்சியில் பங்கு வகிக்கிறதென நாம் எண்ண வேண்டியுள்ளது.

ஆக ஒரு தனி மனிதன் / மனிதக் குடும்ப/குழும வாழ்வுக்கென குழந்தை பருவம் முதற்கொண்டே உருவாகிறார் என்பது நற்பண்புகளோடு இயைந்த குடும்ப வாழ்வுக்கான இன்றைய தேவையைஅழுத்தமாகஅடிக்கோடிட்டு காண்பிக்கிறது.

இப்போது ஜமீலா என்னும் பெண்மணியின் வாழ்விற்கு வருவோம்!

தனது மனப்பதட்டம் மற்றும் அழுத்தத்தைப் பற்றி தெரிந்து கொள்ள ஆற்றுப்படுத்துநர் (Counsellor) ஒருவரிடம் செல்கிறார்.

முதலில், ஆற்றுப்படுத்துதல் என்றால் என்னஎன்பதை தெரிந்து கொள்வோமா?

அதற்கு முன்னதாக எது எல்லாம் ஆற்றுப்படுத்துதல் இல்லை என்பதை தெரிந்து கொள்வதும் பொருத்தமானதே! ஆற்றுப்படுத்துதல் என்பது ஆலோசனை (Advice) வழங்குவது.

அடுத்தவர் வாழ்வின் முடிவுகளை (Life decisions) எடுப்பது, அவரது வாழ்வின் பிரச்சினைகளில் என்னென்ன செய்ய வேண்டும் என பட்டியலிட்டுத் தருவது அடுத்தவரின் மனதை, சிந்தனைஓட்டத்தை இயக்குவது (Directing) அடுத்தவரின் சூழல்களுக்கு உடனடித் தீர்வுகளை சொல்லித்தருவது.இப்படி பட்டியல் நீண்டு கொண்டே போகும்.

சுருக்கமாக, ஆற்றுப்படுத்துநர் என்பவர் அவரைசந்திக்க வருவோரின் காயப்பட்டவாழ்வை தனது ஏற்கனவே உள்வாங்கிய தீர்மானங்களாலும், வழி வகைகளாலும் சரி செய்ய முற்படுகிறார் என்றால் அவர் உண்மையான ஆற்றுப்படுத்துதல் பணியை தவறாக புரிந்து கொண்டிருக்கிறார் என்றே பொருள்படும்.

மேலும் கவுன்சலிங் என்றவார்த்தை எல்லா தளங்களிலும் இயல்பாக பயன்படுத்தப்படும் வார்த்தையாக ஆகி விட்ட காரணத்தால், உளவியல் ஆற்றுப்படுத்துதல் (Psychological Counselling) என்ற வார்த்தையை நாம் மனதால் வேதனைப்படுபவர்களுக்கு உதவி செய்வதற்காகப் பயன்படுத்துவோம்!

ஒகே! ஆற்றுப்படுத்துதல் என்றால் என்னதாங்க!?!

நூல் நீளும்...

## திருத்தலத்தின் இம்மாத நிகழ்வுகள்

**07.11.2023 மாதத்தின் முதல் செவ்வாய். புனித அந்தோணியாரின் சிறப்பு நாள்.**

**திருப்பலிகள்**

- ★ காலை : 06.00 மணிக்கு ஆராதனை, தமிழ் திருப்பலி
- ★ காலை : 07.15 மணிக்கு ஆங்கிலத் திருப்பலி
- ★ காலை: 08.30 மணிக்கு திருப்பலி
- ★ காலை: 11.00 மணிக்கு நற்கருணை ஆராதனை, எண்ணெய் மந்திரிப்பு தமிழ் திருப்பலி- தேர்பவனி.
- ★ பிற்பகல்: 03.00 மணிக்கு திருப்பலி
- ★ மாலை: 06.00 மணிக்கு நற்கருணை ஆராதனை, தமிழ் திருப்பலி- தேர்பவனி.

## அருள் உணவு (அன்னதானம்) வழங்கும் நிகழ்வு

அன்பு வாசகர்களே. ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் நண்பகல் 1.00 மணியளவில் திருத்தலத்திற்கு வருகை புரிகிற அனைத்து அந்தோணியார் பக்தர்களுக்கும் அருள் உணவு வழங்கப்படுகிறது. அந்தோணியாரை தேடி வருபவர்களின் பசியைப் போக்குவதற்கு நீங்கள் முன் வரலாம். உங்கள் திருமண நாள், பிறந்த நாள், வீடு புகுமனை நாள், இறந்தோர் நினைவு போன்ற நாட்களில் அருள் உணவுக்கான உங்கள் நன்கொடைகளை தந்து உதவுங்கள்.

தொடர்புக்கு:

☎ : 96299 99440

ஆண்டவருக்கு நன்றியுரைப்பது நன்று. (திருப்பாடல்கள் 92:1)

# விண்வெளியில் நினைவு அஞ்சலி- யாருக்கு?



1942 ஜனவரி 8 – ஆம் இங்கிலாந்து ஆக்ஸ்போர்டு நகரில் தந்தை விராங்தாய் இசபெல் தம்பதிக்கு மகனாக பிறந்தவர் ஸ்டிபன் வில்லியம் ஹாக்கிங், தந்தை மருத்துவர்–தாயார் தத்து இயல் பட்டதாரி மிகவும் புத்திசாலியான ஸ்டீபன் வில்லியம் ஹாக்கிங் பள்ளிப்படிப்பு, கல்லூரிபடிப்பில் சிறந்து விளங்கினார். உலகப் புகழ் பெற்ற ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் 1959 – ஆம் ஆண்டு இயற்கை அறிவியலை தேர்வு செய்து படித்தார். இதில் பல ஆய்வுகளை மேற்கொண்டார். பின்னர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார். வாழ்க்கையில் பெரிய பெரிய கனவுகளோடு வாழ்ந்து வந்த ஸ்டீபன் வில்லியம் ஹாக்கிங் தனது 21–வது வயதில் மிகப்பெரிய துன்பத்தை சந்திக்க வேண்டியிருந்தது. உடல் நிலைகாரணமாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவரை சோதித்த மருத்துவர்கள் “அமையோட்ரோபிக் லேட்டரால்” என்ற நரம்பியல் நோயால்பாதிக்கப்பட்டிருப்பதாக சொன்னார்கள். இந்த நோயினை குணப்படுத்த இயலாது எனவும், நாட்கள் செல்லச் செல்ல உடல் உறுப்புக்கள் செயலிழந்து விடும் என்றும், இவர் அதிகபட்சம் இரண்டு ஆண்டுகள் தான் உயிரோடு இருப்பார் எனவும் சொன்னார்கள். இந்த செய்தியை கேட்டதும் ஸ்டீபன் வில்லியம் ஹாக்கிங் அதிர்ந்து போகவில்லை. மனம் உடைந்து விடவில்லை, மாறாக மருத்துவர்களிடம் “ என் உடல் உறுப்புக்கள்தானே செயல் இழந்து போகும்.. என் மூளை செயல்படுகிறது.. அது எனக்கு போதும்” என்று சொன்னாராம், இரண்டு ஆண்டுகள் மட்டுமே வாழ முடியும் என்று மருத்துவர்கள் சொல்லியிருந்தாலும், கடுமையான நோயோடு 55 ஆண்டுகள் வாழ்ந்து தன்னுடைய 76–வது வயதில் காலமானார்.

## ஊனம் என்பது உடலில் இல்லை.

அறிவியல் உலகில் சிறகு விரித்து பறக்க வேண்டும் என்று நினைத்த ஸ்டீபன் வில்லியம் ஹாக்கிங், கைகள், கால்கள், செயல்படாமல் போனதால் சக்கரநாற்காலியில் அமர வேண்டிதாயிற்று, நாட்கள் செல்லச் செல்ல பேசக்கூடிய சக்தியை இழந்தார். பேச இயலாது, நடக்க இயலாது, கைகளை அசைக்க இயலாது ஆனால் ஸ்டீபன் வில்லியம் ஹாக்கிங் தனது மூளையை பட்டை தீட்டிக் கொண்டிருந்தார். தன்னுடைய உடல் உறுப்புகள் செய்ய வேண்டிய வேலைகயை, செய்யக்கூடிய கருவிகளை அவரே உருவாக்கினார். ஒருகட்டத்தில் பெரும்பாலான உறுப்புக்கள் செயலிழந்து விட்டநிலையில், “ஈக்குவலைசர்” என்ற கம்யூட்டர் செயலி உதவியோடு தன் கண் தசை அசைவுகள் மூலம் கணினி குரலில்

ஆண்டவர் உன் நோய்களையெல்லாம் குணமாக்குகின்றார். (திபா 103:3)

பேசி பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு வந்ததும் மட்டுமல்ல பல்வேறு பல்கலைக்கழகங்களில் பேராசிரியராகவும் பணியாற்றினார். பல்வேறு புத்தகங்களின் ஆசிரியராகவும் இருக்கிறார். அவர் எழுதிய "A Brief History of Time" பதக்கம் தமிழ் உட்பட 35 உலக மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளது. "ஆடம்சு பர்சு, இயூசு புதக்கம், ஆல்பர்ட் ஐன்சுடைன் விருது, அரசு வானியல், கழகப்தங்கபதக்கம், அடிப்படைஇயற்யியல் பரிசு, இவற்றைதவிர, ஐக்கிய அமெரிக்காவின் உயர்ந்த குடிமகனுக்கான பரிசையும், 2002–ஆம் ஆண்டில் பிபிசி (B.B.C) நடத்திய முக்கியமான 100 பிரிட்டீஷ் நாட்டு மனிதர்களில் 25–வது இடத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். அறிவியல் உலகில் மட்டுமல்ல சமுதாய நலன் மீதும் அதிகமாக அக்கறை கொண்டவர் ஸ்டீபன் வில்லியம் ஹாக்கிங்.

பாலஸ்தீனத்திற்கு எதிராக இஸ்ராயேல் நடத்தும் கொடுமைகளை, அநீதிகளை எதிர்க்கும் விதமாக இஸ்ராயேலில் நடந்த முக்கியமான அறிவியல் கூட்டத்தில் பங்கேற்காமல் தனது எதிர்ப்பை தெரிவித்தார். அது மட்டுமல்லாமல், வியட்நாம் மீதான போர், இராக் மீதான அமெரிக்கா படையெடுப்பு என அடக்கப்படும் மக்களுக்கு ஆதரவாக தன் சக்கரநாற்காலியில் பயணித்தபடியே குரல் கொடுத்தார்.



இந்த சக்கர நாற்காலியின் மாமனிதர் ஸ்டீபன் வில்லியம் ஹாக்கிங் சிறந்த குடும்ப தலைவராகவும், நகைச்சுவை பேச்சாளராகவும் இருந்தார் என்பது ஆச்சரியமான விஷயமாக இருக்கிறது. இவர் 2 பெண்களை திருமணம் செய்து, 3 மகன்களுக்கு தந்தையானவர். ஊனம் என்பதை தூக்கியெறிந்து சராசரி குடும்ப தலைவராக, தந்தையாக, கணவராக வாழ்ந்தவர். தன்னுடைய மிகப் பெரிய ஆசையாய், கனவாய் வைத்திருந்தது விண்வெளிக்குப் பயணமாக வேண்டும். என்பதே ஆனால் அதற்கு அவருடைய உடல் நிலை ஒத்துழைக்காமல் போனதால் அது நடைபெறவில்லை, விண்வெளி சுற்றுலா செல்ல வேண்டும் என்ற ஹாக்கிங் ஆசை நிறைவேறாமல் போனாலும் ஹாக்கிங் மரணத்திற்கு நாசா சார்பில் விண்வெளியில் அஞ்சலி செலுத்தப்பட்டது. விண்வெளியில் பறக்க வாழ்நாள் முழுவதும் எண்ணிக் கொண்டிருந்த ஹாக்கிங்கின் புகழ் பிரபஞ்சம் உள்ள அளவும் நிலைத்திருக்கும் என்பதே உண்மை.

**இளைஞர்களே, மாணவ செல்வங்களே.**

இந்தஉலகத்தில் சாதனை புரிந்த பலமனிதர்கள், பல்வேறு தடைகளை தாண்டியே உயரத்திற்கு வந்துள்ளார்கள். வாழ்க்கையில் நல்ல ஆசைகள் வேண்டும். அசைக்க இயலாத, பேச இயலாத ஒரு மனிதரின் இறப்புக்கு விண்வெளியில் அஞ்சலி செலுத்தும் நிலைக்கு அவர் உயர்ந்திருக்கிறார் என்றால் குறைந்த பட்சம் இந்த மண்வெளியில் பிறர் பாராட்டும் அளவுக்கு உயர்ந்திருப்பது அவசியம் அல்லவா!

– அருட்பணி. **G.K. ராஜ்**

ஆண்டவருக்கு நன்றியுரைப்பது நன்று. (திருப்பாடல்கள் 92:1)

# ஞானப் பெற்றோர்களின் கடமைகளும் தகுதியும்



கத்தோலிக்கத் திருச்சபையில் திருமுழுக்கு திருவருட்சாதனத்தின் இன்றியமையாத நபர்களாக ஞானப்பெற்றோர் விளங்குகின்றனர். கத்தோலிக்க மறைக்கல்வி ஏடு (CCC) எண்: 1255 இவர்களின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது. திருச்சபை சட்டம் 872 874 ஞானப் பெற்றோர்களின் கடமைகள் மற்றும் முக்கியத்துவத்தையும் அவர்களின் தகுதியையும் எடுத்துரைக்கிறது.

### ஞானப்பெற்றோரின் தகுதிகள்

திருச்சபை சட்டம் 874

ஞானப்பெற்றோர், திருமுழுக்குப் பெறுபவரின் பெற்றோருடைய கடமைகளை நிறைவேற்றஅவர்களுக்கு உதவி புரிய வேண்டும்

ஞானப்பெற்றோர் 16 வயது நிறைவடைந்தவர்களாக அவசியம் இருக்க வேண்டும்

ஞானப்பெற்றோர் திவ்விய நற்கருணை அருட்சாதனம் பெற்றவர்களாக இருக்க வேண்டும்

திருப்பலிகளில் பங்கேற்று திவ்விய நற்கருணை பெறுகிறவர்களாக இருத்தல் வேண்டும்.

இறை நம்பிக்கையில் தங்களை முழுவதுமாகக் கையளிக்க வேண்டும் திருமுழுக்குப் பெறுகிறவரின் தந்தையாகவோ தாயாகவோ இருத்தல் கூடாது

### திருச்சபை சட்டம் 873

ஞானப்பெற்றோர் ஒரு ஆண் மற்றும் பெண் நபர்களாக இருக்கலாம்

ஞானப்பெற்றோர் ஒரே ஒரு நபராகக் கூட இருக்கலாம்

இரண்டு ஆண்கள் அல்லது இரண்டு பெண்கள் ஞானப்பெற்றோர்களாக இருக்க முடியாது

இரண்டு நபர்களுக்கு மேல் ஞானப்பெற்றோர் இருக்க முடியாது

### திருச்சபை சட்டம் 874

கத்தோலிக்கரல்லாத பிரிவினை சபைகள் மற்றும் மற்ற மதத்தைச் சார்ந்தவர்கள் ஞானப்பெற்றோர்களாக இருக்க திருச்சபை சட்டத்தில் இடமில்லை

கத்தோலிக்கரல்லாத ஒருவர் இன்னொரு கத்தோலிக்கரோடு இணைந்து ஞானப்பெற்றோராக இருக்கலாம். இருவரும் வெவ்வேறுபாலினத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்

ஞானப்பெற்றோர் கத்தோலிக்கராக இருப்பதோடு கத்தோலிக்க மதத்தை இப்போது கடைப்பிடிப்பவராக இருக்க வேண்டும் (Practicing Catholic)

நம்பிக்கையில் நிலைத்து நிற்பவராக ஞானப்பெற்றோர் இருத்தல் அவசியம் (Form faith of the Catholic Church)

## ஞானப்பெற்றோரின் கடமைகள்

திருமுழுக்குப் பெற்றவர்களை நம்பிக்கையில் வளர்த்தெடுப்பது அவசியம் தினம்தோறும் திருப்பலியில் பங்கெடுத்து திவ்விய நற்கருணை உட்கொள்ள வேண்டும்

இறைமக்களின் நன்மதிப்பை பெற்றிருக்க வேண்டும் (Good Reputation)

ஞானப்பெற்றோர் நம்பிக்கையில் நிலைத்திருக்க வேண்டும்

திருச்சபையின் கோட்பாடுகளில் நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும்

திருமுழுக்குப் பெற்றவர்களின் ஆன்மிகவளர்ச்சிப் பாதையில் தங்களையே இணைத்துக் கொள்ள வேண்டும்

கிறிஸ்துவின் மதிப்பீடுகள் தங்களையே இணைத்துக் கொள்ளுதல் மற்றும் வாழ்வாக்குதல்

## ஞானப்பெற்றோர்களை தயார் படுத்தும் முறைகள்

ஞானப்பெற்றோர்கள் திருச்சபை உறுப்பினர்கள் என்பதைஉறுதிப்படுத்த வேண்டும் (Family Card)

ஞானப்பெற்றோர் தாங்கள் நல்ல ஒப்புரவு திருவருட்சாதனம் பெற்றுதங்களை தூய்மையாக்கிக் கொள்ளுதல் அவசியம்

திருமுழுக்குப் பெறுகிறவரின் குடும்ப நிலையறிந்து அவரின் ஆன்மிக வாழ்வுக்கு உறுதுணை புரிதல் அவசியம்

திருமுழுக்கு திருவருட்சாதனத்திற்கு முன் முடிந்தால் நல்லதியானத்தில் பங்கேற்று கிறிஸ்தவ மதிப்பீடுகளை வாழ முயற்சி செய்தல்

ஞானப்பெற்றோர் ஆன்மிகக் காரியங்களிலும் தேவைப்படின் பொருளாதார உதவிகளைச் செய்யவும் முன் வர வேண்டும்

**திருமுழுக்கு கொடுக்கும் நபர்கள் (Ministers of the Sacrament of Baptism) - திருச்சபை சட்டம் எண்: 861**

சாதாரணஅமைச்சர் (Ordinary Ministers)

ஆயர், குரு மற்றும் திருத்தொண்டர் மூவரும் திருமுழுக்கு திருவருட் சாதனங்களைக் கொண்டாடும் சாதாரண அமைச்சர்கள்

அசாதாரண அமைச்சர்கள் (Extraordinary Ministers)

சாதாரணஅமைச்சர் கொடுக்க முடியாதபோது வேதியர் அல்லது ஒரு நபர் ஆயராலே அல்லது ஆயரின் பிரதிநிதியாலே குறிக்கப்பட்டு அவர்களுக்கு சிறப்பு அனுமதி கொடுத்தல் வேண்டும்

தேவையின் அடிப்படையில் (In case of Necessity)கத்தோலிக்கமதத்தைக் கடைப்பிடிப்பவர், ஒருவரைக் கொண்டு சரியானஎண்ணம் கொண்டவர் (Right Intention) திருமுழுக்கு செல்லத்தக்க முறையில் (Licitly) கொடுக்கலாம்.



அருட்பணி. யாக்கோபு,
பங்குத்தந்தை, மடிப்பாக்கம்

# ஜோக்ஸ்



1. (Exam தொடங்குவதற்கு முன்....)

**மாணவன்** : டீச்சர் எனக்கு ஓர் Doubt...

**டீச்சர்** : Exam ஆரம்பிக்க இன்னும் அரைமணி நேரம் தான் இருக்கு....., இப்ப போயி என்னடா Doubt...?

**மாணவன்** : இன்னிக்குஎன்ன Exam டீச்சர்?.

**டீச்சர்** : ????????

2.



**ராமு** : ஒருத்தர் கைல கிடைச்ச பொருள் எல்லாத்தையும் தூக்கி வீசிக்கிட்டே இருப்பார். ஏன் தெரியுமா?

**சோமு** : தெரியாது

ராமு : ஏன்னா அவருக்கு "வீசிங்" பிரச்சனை இருக்கு.

3.

**ஆசிரியர்** : நான் இன்னும் ஒரு வருஷத்துல ரிட்டையர்டு ஆகபோறேன்.....

மாணவன் : தேம்பித் தேம்பி அழுகிறான்.

**ஆசிரியர்** : தம்பி... அழுவாத. நான் இன்னும் ஒரு வருஷம் இங்க இருப்பேன்.

மாணவன் : சார்... அத நெனச்சாதான் சார் அழுகை வருது.



4.

ரமேஷ் : கோபமாக வருகிறான்.

சுரேஷ் : ரமேஷ் என்ன கோபமா இருக்க

ரமேஷ் : பக்கத்து வீட்டுக்காரனுக்கு காய்ச்சல்னு நலம் விசாரிக்க போனேன். ஏன் உடம்பு இப்படி கொதிக்குதுன்னு கேட்டா.. அதுக்கு அவன் நெருப்புடா.. கபாலிடான்னு சொல்றான். சாவுடான்னு சொல்லிட்டு வந்துட்டேன்

5.

மாமியார் : மருமகளே, உனக்கு சமைக்க தெரியாதுன்னு சொன்னது கூட நான் மன்னிச்சுடலாம் விட்டு வேண்டி.. ஆனா பாலை Sim–ல வைன்னு சொன்னதுக்கு Sim 1 னா, Sim 2 வான்னு கேட்ட பாரு... அத தான் என்னால மன்னிக்கவே முடியாது.

# சாட்சிகள்

எனது பெயர் சிசிலி நான் வில்லிவாக்கம் கிறிஸ்து அரசர் ஆலயப்பங்கைச் சார்ந்தவள். ஒரு அந்தோணியார் பக்தை நான் செவ்வாய்கிழமைகளில் பாரீஸ் அந்தோணியார் திருத்தலம் மற்றும் ஆவடி புனித அந்தோணியார் திருத்தலம் செல்வது வழக்கம்.ஒருநாள்ஊரில் இருந்து எனது சொந்தக்காரர் வந்து எனதுமகனுக்கு 30 வயது ஆகிறது, இன்னும் திருமணம் ஆக வில்லை என்றுமிக வருத்ததோடு சொன்னார். எந்த பெண்ணைப் பார்த்தாலும் பிறகு சொல்கிறோம் என்று சொல்லி செல்கிறார்கள்என்றுஎன்னிடம்அந்தமகனின் தாயும், தந்தையும் சொல்லி வருத்தப்பட்டார்கள்.நான் அவர்களிடம் சொன்னேன் கவலைப்படாதீர்கள் நான் கடவுளிடம் வேண்டுகிறேன்என்றுஅவர்களை ஆறுதல் சொல்லி அனுப்பி வைத்தேன். அடுத்தநாள் கடைக்குச் செல்லும் வழியில் எனது தோழியைசந்தித்தேன் ,அவளிடம் இந்தவிசயத்தை பற்றி சொன்னேன். அவள்தான் உடனே நீ ஒரு தடவை பாலவாக்கம் புனித அந்தோணியார் திருத்தலம் செல். அந்த திருத்தலத்தில் அநேகபுதுமைகள் நடக்கிறது அங்கே சென்று வேண்டுங்கள்என்று சொன்னாள். நானும் முதல் செவ்வாய்கிழமை வந்து அந்தோணியாரிடம் கண்ணீர் விட்டு மனம் உருகி வேண்டினேன்அந்தமகனுக்கு நல்லமணப்பெண் அமைந்தால் நான் சாட்சி சொல்கிறேன் என்று வேண்டினேன். அடுத்தமாதமேஅந்தமகனுக்கு நல்லமணப்பெண் அமைந்து நிச்சயதார்த்தம் முடிந்து அதற்கு அடுத்தமாதமே திருமணம் என்று முடிவு எடுத்து விட்டார்கள். அந்த மகனின் தாயும் தந்தையும் என்னிடம் அலைபேசி மூலம் என்னிடம் சொன்னார்கள். சொன்னவுடன் எனக்கு அளவில்லா சந்தோஷம் கடற்கரை புனித அந்தோணியார் என்னைக் கைவிட வில்லை. பாலவாக்கம் புனித அந்தோணியாருக்கு கோடான கோடி நன்றிகள். பாலவாக்கம் புனித அந்தோணியாரே வாழ்க

என் பெயர் ஆஷா ராயபுரத்தில் இருந்து வருகிறேன் நான் செவ்வாய்கிழமைகளில் அந்தோணியார் திருத்தலம் வருவது வழக்கம். எனது மகள் பெயர் லின்சி ரேச்சல்அவளுக்கு வெளிநாட்டிற்கு போய்MS படிக்க வேண்டும்அதுதான் என் கனவு ஆசைஎன்றுஅடிக்கடி என்று சொல்வாள். நானும் கடவுளிடம் வேண்டிக்கொள்கிறேன். நீயும் கடவுளிடம் வேண்டிக்கொள், நல்லதேநடக்கும்என்றுஆறுதல் சொன்னேன். MSபடிக்க ஜெர்மனுக்கு விசா போட்டாள் 1 வருடம் ஆகியும் விசா வரவில்லை. நாங்கள்எங்கு போய் யாரிடம் கேட்பது யாரை பார்ப்பது என்றுகூட தெரியவில்லை. போனமாதம் நான் வந்து அந்தோணியாரிடம் கண்ணீர் விட்டு மகளுக்கு நல்லபடியாவிசா கிடைத்தால் நான் சாட்சி சொல்கிறேன் என்று வேண்டினேன். அதேமாதம் ஆகஸ்ட் 28.08.2023 அன்று விசா கிடைத்து எனது மகளும் வெளிநாடு படிக்கச் சென்றுவிட்டாள் அந்தோணியாருக்கு கோடான கோடி நன்றிகள். கடற்கரை புனித அந்தோணியாரே வாழ்க!

என் உயிரே! ஆண்டவரைப் போற்றிடு. (திருப்பாடல்கள் 103:1)

# திருத்தல திருப்பலி நேரங்கள்



## ஞாயிற்றுக்கிழமைகளில்

காலை 06:00 மணிக்கு தமிழ் திருப்பலி
காலை 07:15 மணிக்கு தமிழ் திருப்பலி
காலை 07:15 மணிக்கு மறைக்கல்வி திருப்பலி
காலை 09.30 மணிக்கு ஆங்கிலத் திருப்பலி
பகல் 11.00 மணிக்கு தமிழ் திருப்பலி
மாலை 06.00 மணிக்கு தமிழ் திருப்பலி

## மாதத்தின் முதல் செவ்வாய்க் கிழமைகளில்

காலை 06.00 மணிக்கு ஆராதனை, தமிழ் திருப்பலி
காலை 07.15 மணிக்கு ஆங்கிலத் திருப்பலி
காலை 08.30 மணிக்கு திருப்பலி
காலை: 11.00 மணிக்கு ஆராதனை, தமிழ் திருப்பலி
பிற்பகல் 03.00 மணிக்கு திருப்பலி
மாலை 06.00 மணிக்கு ஆராதனை, தமிழ் திருப்பலி

## மற்ற செவ்வாய் கிழமைகளில்

காலை 06.00 மணிக்கு ஆராதனை, தமிழ் திருப்பலி
காலை 11.00 மணிக்கு ஆராதனை, தமிழ் திருப்பலி
மாலை 03.00 மணிக்கு திருப்பலி
மாலை 06.00 மணிக்கு ஆராதனை, தமிழ் திருப்பலி

## வார நாட்களில்

காலை 6.30 மணிக்கு ஆராதனை, தமிழ் திருப்பலி
மாலை 6.30 மணிக்கு ஆராதனை, தமிழ் திருப்பலி

ஆண்டவரே! நீர் என்றும் எம்மைக் காத்தருளும். (திருப்பாடல்கள் 12:7)